விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 210 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 32 செவ்வாய்க்கிழமை (16.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## நிறைவுக்கு வந்தது கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள்

- இதுவரை 52 மனித எச்சங்கள் மீட்பு
- நேற்றும் 5 மனித எச்சங்கள், துப்பாக்கிச் சன்னம், திறப்புக்கோர்வை மீட்பு




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சியின் 10ஆவது நாளான நேற்று ஐந்து மனித எச்சங்கள் முழுமையாக வெளியே அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் துப்பாக்கிச் 15

### சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு

## வைத்தியர் அர்ச்சுனா வருகையால் குழப்பம்

(சாவகச்சேரி)



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகராக இருந்த இராமநாதன் அர்ச்சுனா வருகை தந்தமையால் நேற்று குழப்பமான நிலை ஏற்பட் 15

## ஜனாதிபதித் தேர்தலைத் தடுக்க கோரிய மனு நீதிமன்றால் நிராகரிப்பு

05ஆம் பக்கம் பார்க்க

### சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்காத

# அரசாங்கம் இருந்தும் எப்பயனும் இல்லை

## நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ



(கொழும்பு)

நாட்டு மக்களின் உயிர், உடைமைகளைப் பாதுகாக்க அரசாங்கத்தால் முடியாவிட்டால் அந்த அரசாங்கத்தால் எந்தப் பயனும் இல்லை என நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி கல்முனை கடற்கரையில் ஆணின் சடலம் மீட்பு

(பூநகரி)

பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை தெற்கு கடற்கரையில் ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது. 15

## இனப் பிரச்சினைக்கு அனைத்து இனத்தவரும் ஏற்கக்கூடிய தீர்வை முன்வைக்குக

### புத்திஜீவிகள் குழு ஜே.வி.பியிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அனைத்து இனத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றை தேசிய மக்கள் சக்தி முன்வைக்க வேண்டும் என இலங்கையின் புத்திஜீவிகள் கல்விமான்கள் அடங்கிய குழுவொன்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடக்கின் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய நடைமுறை சாத்தியமான தீர்வாக அது காணப்படவேண்டும் எனவும் அந்தக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறிப்பிட்ட குழு 02

## கருவள சிகிச்சைக்கான ஸ்கானர் யாழ்.போதனாவுக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

அபயம் ஆரோக்கியம் மற்றும் கல்விக்கான அறக்கட்டளை நிலையமும் சிவபூமி அறக்கட்டளை நிலையமும் இணைந்து இல.66, முதலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலையின் சிகிச்சைப்பிரிவான பெண்கள் சுகாதார மையத்திற்கு அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய அல்ராசவுண்ட் ஸ்கான் இயந்திரம் ஒன்று நாளை புதன்கிழமை நன்கொடையாக வழங்கப்படவுள்ளது.

இந்த ஸ்கான் இயந்திரம் வடக்கு, 15

## பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம்

### 75 நாட்களின் பின் முடிவுக்கு வந்தது

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொழிற் சங்கங்கள், அமைச்சர் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழு தலைவருடன் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. 15

## கனடா ஆசை காட்டி மோசடி இருவர் கைது

(கொழும்பு)

கனடாவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறிப் பணத்தை மோசடி செய்த இருவரை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் அதி 15

### இன்று முதல் அமுலாகும் வகையில்

## மின்சாரக் கட்டணம் 22.5 வீதமாக குறைப்பு

(கொழும்பு)

இன்று முதல் அமுலாகும் வகையில் மின் கட்டணத்தை 22.5 சதவீதத்தினால் குறைப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

மின்சாரக்கட்டணக் குறைப்பு தொடர்பான முன்மொழிவுகளை இலங்கை மின்சார சபை அண்மையில், பொதுப் பயன்பாடு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பில்

## யாழ். மாநகர சபையின் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பில் யாழ். மாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் அறிவித்துள்ளார்.

மேற்படி நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா 2024 ஆம் ஆண்டிற்கான புற ஏற்பாடுகள் முதலாவது கலந்துரையாடலானது மாநகர ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் அவர்களின் தலைமையில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கேட்போர் கூடத்தில் நேற்று திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் பிரதி பொலிஸ்மா அதிபர், நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள், நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை மின்சார சபை, இலங்கை போக்குவரத்துச் சபை, யாழ் மாவட்ட தனியார் பஸ் சங்கம், பிரதேச செயலகம் நல்லூர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை சாரணர் சங்கம், அன்னதான மடங்கள், தண்ணீர் பந்தல் என்பவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தார்கள்.

இக்கூட்டத்தில் பெருந்திருவிழா புற ஏற்பாடுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.ஆலயச் சூழலில் வீதிப் போக்குவரத்து நடவடிக்கைகள் 07.08.2024 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் 04.09.2024 நள்ளிரவு வரை ஆலய வெளி வீதியின் ஊடான போக்குவரத்துக்கள் முற்றாக தடைசெய்யப்பட்டிருக்கும்.

2. பிரதான வீதித்தடைகள் பருத்தித்துறை வீதியில் மாநகர சபைக்கு முன்புறம் அரசடிச்சந்தி, கோயில் வீதியில் சங்கிலியன் வீதி சந்தி, பிராமணக்கட்டு குள வீதிச் சந்தி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும். சுகாதார பாதுகாப்பு தேவைகளிற்கேற்ப மேற்படி வீதித்தடைகளின் அமைவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

3. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டது போல இம்முறையும் மாற்று வீதி ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் வழமை போல் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு முன்னால் உள்ள குறுக்கு வீதியால் பயணித்து நாவலர் வீதி ஊடாக ஆனைப்பந்தி சந்தியை அடைந்து யாழ் நகரை அடைய முடியும். யாழ் நகரில் இருந்து திரும்பும் வாகனங்கள் அதே பாதை ஊடாக பருத்தித்துறை வீதியை அடைய முடியும். விசேட பெருந்திருவிழாக்களின் போது முத்திரைச்சந்தியில் திரும்பி கச்சேரி நல்லூர் வீதி ஊடாக நாவலர் வீதியை அடைந்து பயணிக்க முடியும்.

கோயில் வீதி வழியாக வரும் வாகனங்கள் சங்கிலியன் வீதியூடாக பருத்தித்துறை வீதியை அடைந்தும், செட்டித்தெரு ஒழுங்கையூடாக பருத்தித்துறை வீதியை அடைந்து பயணிக்க முடியும்.

4.தூக்குக் காவடிகள் வழமை போல் பருத்தித்துறை வீதி வழியாக உள்நுழைந்து ஸ்ரீமுருகன் தண்ணீர் பந்தலில் காவடிகள் இறக்கி டிரக்டர்கள் செட்டித்தெரு வீதியூடாக வெளியேற வேண்டும்.

5. ஆலய வீதிச்சூழலில் வீதித்தடைகளுக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் வழமை போல வாகன அனுமதி அட்டை மாநகர சபையால் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நிரந்தர வியாபாரிகள் பொருட்களை ஏற்றி இறக்க விசேட நேரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

6. உற்சவ காலங்களில் சிறுவர்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.

7.ஆலய வெளி வீதி சூழலில் வியாபார, விளம்பர மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது.

8.உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் பொலித்தீன் பாவனை முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.

9. உற்சவ காலங்களில் ஆலய வெளி வீதி சூழலில் காலணிகளுடன் நடமாடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

10. உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் பக்தி கீதங்கள் மட்டுமே ஒலிபரப்பு செய்யமுடியும்.

11. உற்சவ காலங்களில் விநியோகிக்கப்படும் விளம்பரங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்களில் கடவுள் திருவுருவப்படங்கள் பிரசுரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

12. ஆலயச் சூழலில் ட்ரோன் (Drone) கமராக்களைப் பயன்படுத்தி காணொளி பதிவு செய்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு அமைவாக நல்லூர் பெருந்திருவிழா நடைபெறுவதற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என யாழ். மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ம-7)

## அரசாங்கம்...

தேசிய மத்தியஸ்த தினத்தை முன்னிட்டு இலங்கை மன்ற கல்லூரியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேசிய மத்தியஸ்த சபை 1958 காலப்பகுதியில் எமது நாட்டில் அறிமுகப்படுத்திய போதும் அது வெற்றியளிக்காதபோது, அந்த நடவடிக்கை நிராகரிக்கப்பட்டது. பின்னர் 1988 இல் மீண்டும் மத்தியஸ்த சபை சட்டம் கொண்டு வரப்பட்டது.

அன்றுமுதல் இன்றுவரை மத்தியஸ்த சபை இயங்கி வருகிறது. ஒவ்வொரு வருடமும் ஜூலை 18ஆம் திகதி தேசிய மத்தியஸ்த தினம் கொண்டாடப்படுகிறது.

நாடொன்றில் மக்களின் உயிர், உடைமைகளை பாதுகாப்பது அந்த நாட்டின் அரசாங்கத்தின் கடமையாகும். நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கே மக்கள் அரசாங்கம் ஒன்றை நியமிக்கிறது. அந்த அரசாங்கத்தால் மக்களின் உயிர் உடைமைகளை பாதுகாக்க முடியாவிட்டால் அந்த அரசாங்கத்தினால் பயனில்லை. சமூகத்தில் முரண்பாடுகள் ஏற்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் அரசாங்கம் நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாத்தால், அந்த நாடு தானாக வளர்ச்சியடையும். தேர்தல் காலம் வரும்போது லீக்வான் யூ. மஹதீர் மொஹமத் போன்றவர்களின் பெயர்களை தெரிவிக்கின்றனர். அவர்கள் நாட்டை முன்னேற்றவில்லை. மாறாக அவர்கள் நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாத்தார்கள். இதன் மூலம் அந்த நாட்டு விவசாயிகள் நாட்டை வளப்படுத்தினார்கள். இன்றும் சிங்கப்பூரில் ஒரு மனிதன் எத்தனை மில்லியன் ரூபாயையும் கையில் எடுத்துக் கொண்டு எங்குவேண்டுமானாலும் சென்றுவர முடியும். அந்த நிலைமை எமது நாட்டில் இல்லை.

எனவே சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பது, செலவினங்களை குறைப்பது மற்றும் விவசாயிகளுக்கு தேவையான அடிப்படை தேவைகளை செய்துகொடுப்பது நாட்டை ஆட்சி செய்யும் அரசாங்கத்தின் கடமையாகும். சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்காவிட்டால்தான் நாட்டுக்குள் கொலை, கொள்ளை என்பன தலைதூக்க காரணமாகின்றன. சட்டம் ஒழுங்கை பாதுகாக்க முடியாத அரசாங்கத்தினால் எந்தப் பயனும் இல்லை என்றார். (ம-7)

## இனப்...

வினர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேசிய மக்கள் சக்தி என்பது 2022 ம் ஆண்டு மக்கள் போராட்டம் மூலம் வெளிப்பட்ட மக்கள் அபிலாசைகளுடன் தொடர்புபட்ட பிரதான இயக்கமாக தேசிய மக்கள் சக்தி மாற்றமடைந்து வருகின்றது. இந்த நிலைமை 1947ம் ஆண்டு இலங்கையின் முதலாவது தேசிய தேர்தலின் போது காணப்பட்ட நிலைமைக்கு ஒப்பானது - நாங்கள் பொன்னான வாய்ப்பை தவறவிட்டோம்.

ஆகவே எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெறுவதற்கும் அதன் பின்னர் இலங்கை சமூகத்தில் கடும் கருத்து வேறுபாட்டை தொடர்ந்தும் உருவாக்கிவரும் இனப் பிரச்சினை உட்பட தேசிய பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பதற்கும் பின்வரும் விடயங்களிற்கு முன்னுரிமை வழங்குமாறும் நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

இனவெறி ஏதேச்சதிகாரம் நவதாரளவாதம் ஆகியவற்றிற்கு எதிரான முற்போக்கு மற்றும் அனைத்து இடதுசாரி சக்திகளையும் ஐக்கியப்படுத்துவதன் மூலம் மக்களை ஐக்கியப்படுத்த வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்காக அனைத்து இனக்குழுக்களுக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை முன்வைக்கவேண்டும். 2022 போராட்டத்தின் போது இனவெறி ஏதேச் சதிகாரம் நவதாரளவாதம் ஆகியவற்றிற்கு எதிரான அபிலாசைகள் வெளிப்படுத்தப்பட்ட போதிலும்,தேசிய மக்கள் சக்தி அவற்றை முழுமையாக பிரதிநிதித்துவம் செய்வதற்கு தவறிவிட்டது என்பது எங்களின் அவதானிப்பு.

எனவே தேசிய மக்கள் சக்தி இனவெறி ஏதேச்சதிகாரம் நவதாரளவாதம் ஆகியவற்றிற்கு எதிரான முற்போக்கு மற்றும் அனைத்து இடதுசாரி சக்திகளையும் ஐக்கியப்படுத்துவதன் மூலம் மக்களை ஐக்கியப்படுத்த வேண்டும்.

இந்த மூலோபாய தொலை நோக்குடன் இனப்பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்காக அனைத்து இனக்குழுக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை முன்வைப்பதே தேசிய மக்கள் சக்தியின் இரண்டாவது முன்னுரிமைக்குரிய விடயமாக காணப்பட வேண்டும். அந்த தீர்வு வழமைபோல பொது எதிரி இனவெறியை தூண்டுவதற்கு வழிவகுக்ககூடியதாக காணப் படக்கூடாது.

மேலும் வடக்கின் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையை பெறக்கூடிய நடைமுறைசாத்தியமான தீர்வாக அது காணப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


## விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 6 பரப்புக் காணி, யாழ். மின்சார நிலைய வீதியில், பழைய தபாற்கந்தோர் வீதியில் 4 பரப்பும் 7 குழிக் காணியும் யாழ். மனோகராத் தியட்டர் அண்மையில் 5 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

(1485)

தொடர்புகளுக்கு :

077 723 2535



## கண்ணீர் அஞ்சலி

யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் 16 வருடங்கள் அதிபராக இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அரும் பாடுபட்ட பெரும் மதிப்பிற்குரிய



**கே.வி. குணசேகரம்**

(ஓய்வு பெற்ற நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர்)

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் அமரர் கே.வி.குணசேகரம் அவர்கள் அதிபராகப் பணியாற்றிய காலத்தில் அவருடன் சேர்ந்து பணியாற்றி, தற்பொழுது யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் அதிபரும் ஆசிரியர்களும்

(C-805)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பு, இறப்பு, திருமணச்சான்றிதழ்கள் வழங்குவதில் மீண்டும் சிக்கல்

(கொழும்பு)

நாட்டில் உள்ள சில பதிவாளர்கள் பிறப்பு, திருமணங்கள் மற்றும் இறப்பு சான்றிதழ்களை பதிவு செய்த பின்னர் சம்பந்தப்பட்ட பிரதிகளை அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்புவதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெற்றோர், திருமணமான தம்பதிகள் மற்றும் பாதுகாவலர்களுக்கு ஒரு நகலை வழங்கினாலும் ஏனைய பிரதிகள் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்படுவதில்லை என கூறப்படுகின்றது.

இதனால் பிறப்பு, திருமணம், இறப்பு நகல்களை பெற்றுக்கொள்வதற்காக ஆவண காப்பகத்திற்கோ அல்லது சம்பந்தப்பட்ட பிரதேச செயலக அலுவலகங்களுக்கோ சென்றாலும் பிரதிகள் இல்லாமையினால் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், சில பதிவாளர்கள் பிறப்பு, திருமணம், இறப்பு பதிவு செய்தாலும், சம்பந்தப்பட்ட புத்தகத்தில் உள்ள தகவல்களை நகல் எடுப்பதில்லை என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 400 பிறப்பு, திருமண, இறப்பு பதிவாளர்கள் இருப்பதாகவும், அவ்வாறான சம்பவம் ஏதேனும் ஒரு இடத்தில் இடம் பெற்றிருந்தால், அது தொடர்பில் ஆராய முடியும் எனவும் பதிவாளர் நாயகம் டபிள்யூ. ஆர்.ஏ.என். எஸ்.விஜேசிங்க தெரிவித்துள்ளார். (நி-6)

# மொட்டின் ஜனாதிபதி வேட்பாளர் தம்மிக்க

## உதயங்க வீரதுங்க உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக்க பெரேராவையும் பிரதமராக நாமல் ராஜபக்ஷவையும் நியமிப்பதற்கு ராஜபக்ஷ குடும்பத்தினர் இணங்கியுள்ளதாக ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தம்மிக்க பெரேரா என்பது உறுதியாகியுள்ளதாக உதயங்க வீரத்துங்க தெரிவித்துள்ளார்.


ராஜபக்ஷ குடும்பத்துக்குள் இதற்கான தீர்மானம் இறுதியாகியுள்ளது.

அத்துடன், பிரதமர் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவின் பெயர் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க என்பவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எதிரிஸ்தானத்தில் இருக்கும் ஒருவராவார்.

அவர் ஒருபோதும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட மாட்டார். எதிர்வரும் தேர்தலிலும் அவர் போட்டியிடுவார் என்றும் கூறமுடியாது.

எனவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தம்மிக்க பெரேராவே என்பது முழுமையாக தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் எந்த மாற்றமும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)



# மாகாண மட்ட பளுதூக்கல் போட்டி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட பளுதுக்கல் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று 17,20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டியும், நாளை மற்றும் நாளை மறுதினம் 17, 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியும் நடைபெறவுள்ளது. (நி-6-90)

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
CELEBRATING 25 YEARS OF TRUST & EXCELLENCE IN HIGHER EDUCATION
Pearson Assured | BRITISH COUNCIL IELTS

Explore the journey to
Successful Pathway at
School of Languages




- Diploma in English (6months)
  - Academic Reading
  - Academic Writing
  - Advance Speaking
  - Listening
- IELTS
  - Academic or General
  - Mock Exams
  - IELTS Registration
- PTE


For More Information
077 161 5478
Weekdays / Weekend Classes
(C-799)
021 221 9910
"Building Careers Transforming Lives"
NO 16, Point Pedro Road, Jaffna www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட தடகளப் போட்டி

## கோலூன்றிப் பாய்தல் மகாஜனவுக்கு 2 பதக்கங்கள்





அகில இலங்கை தேசிய மட்ட கனிஷ்ட பிரிவினருக் கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கு இரு பதக்கங்கள்.


அகில இலங்கை தேசிய மட்ட கனிஷ்ட பிரிவினருக் கான தடகளப் போட்டி தியகம மைதானத்தில் நடைபெற்று வருகிறது. 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப்பாய்தல் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த சந்திர குமார் துஷாந்தன் 3.90 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த சி.சுவர்ணா 3 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்

(நி-6-90)

## சம்மட்டி எறிதலில் யாழிற்கு 6 பதக்கங்கள்









அகில இலங்கை தேசிய மட்ட கனிஷ்ட பிரிவினருக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் யாழிற்கு 6 பதக்கங்கள் கைப்பற்றியுள்ளனர்.

அகில இலங்கை தேசிய மட்ட கனிஷ்ட பிரிவினருக்கான தடகள போட்டி தியகம மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற 16 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் யா/தும்பளை சிவப் பிரகாச மகாவித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வி.அபிசனா 23.40 மீற்றர் தூரம் எறிந்து வெண்கல பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.


16 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் பொலிகண்டி இந்துத் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த றெ.நிஷாலினி வெள்ளிப் பதக்கம் கைப்பற்றியுள்ளார்.


18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் பொலிகண்டி இந்துத் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த செவ்வானம் வெள்ளிப் பதக்கத்தையும், யதுஷா வெண்கலப் பதக்கம் கைப்பற்றியுள்ளனர்.

இதில் 23 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் யாழ்.மாவட்ட மெய் வல்லுநர் சங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.சந்தோஸ் வெள்ளிப் பதக்கத்தையும், தி.மிதுசன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

(நி-6-90)

## குண்டு எறிதலில் 2 பதக்கங்கள்





அகில இலங்கை தேசிய மட்ட கனிஷ்ட பிரிவினருக்கான குண்டு எறிதல் போட்டியில் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வீரர்கள் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள்.

அகில இலங்கை தேசிய மட்ட கனிஷ்ட பிரிவினருக்கான தடகளப் போட்டி தியகம மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 23 வயதிற்கு உட்பட்ட ஆண் களுக்கான குண்டு எறிதல் போட்டியில் யாழ். மாவட்ட மெய் வல்லுநர் சங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்த தி.மிதுசன் தங்கப் பதக்கத்தையும், ரி.சந்தோஷ் வெள்ளிப் பதக்கத்தையும் கைப் பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(நி-6-90)

## தட்டெறிதல் போட்டி லக்சயன் வெண்கலம்



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான கனிஷ்ட பிரிவினருக்கான தடகளப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த கே.லக்சயன் வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டிகள் தியகம மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் 16 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த கே.லக்சயன் 40.26 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

(நி-6-90)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால்

# கடும் நடவடிக்கை

## ஆளும் கட்சி அமைச்சர்கள் அரசிடம் கோரிக்கை

**(கொழும்பு)**

**மக்களைச் சிரமத்திற்கு உள்ளாக்குகின்ற தொழிற்சங்க தலைவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு கடந்த வாரம் ஆளும் கட்சியின் அமைச்சர்கள் குழுவொன்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

அத்தியாவசியச் சேவைகள் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறு அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மைய நாட்களாக இடம்பெற்ற திடீர் புகையிரதப் பணிப்புறக்கணிப்பு காரணமாக பெருமளவான பயணிகள் எதிர்நோக்கும் சிரமங்களைக் கருத்திற்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்களை ஒடுக்கும் தொழிற்சங்கத் தலைவர்கள் தொடர்பில் உரிய அமைச்சர்கள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கடுமையாக சுட்டிக்காட்டியுள்ளார்.

சில தொழிற்சங்க தலைவர்கள் சில அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் பேரில் எடுக்கப்படும் தீர்மானங்களினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலின் போது பாதகமான சூழ்நிலை ஏற்பட்டாலும் மக்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் காஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மக்களை ஒடுக்கும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் போக்குவரத்து அமைச்சர் பந்துலகுண வர்தனவும் வலியுறுத்தியுள்ளார். (நி-6)

### அலிசப்ரி ருமேனியா, போலந்து விஜயம்



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ருமேனியா மற்றும் போலந்து ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இந்த விஜயங்களின் போது, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பல முக்கிய அதிகாரிகளை சந்திக்கவுள்ளார்.

இதேவேளை ருமேனியா தலைநகர் புக்கரெஸ்டில் புதிய இலங்கைத் தூதரகத்தை வெளிவிவகார அமைச்சர் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கவுள்ளார். அங்கு 2023 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை தனது தூதரக செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான மனுவை தள்ளுபடி செய்தது உயர் நீதிமன்றம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சட்டத்தரணியொருவர் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை தள்ளுபடி செய்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்தக் கோரி சட்டத்தரணி அருண லக்சிறியினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை பிரதம நீதியரசர் உட்பட மூவரடங்கிய நீதியரசர் குழாம் ஆராய்ந்தது. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய அர்ஜுன ஒபேசேகர மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றது.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் முறையான முறையில் நிறைவேற்றப்படாததால் அதனை சர்வஜன வாக்கெடுப்புக்கு அனுப்பி அதனை அங்கீகரிக்கும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதன் மூலம் அரசியலமைப்பு மீறப்படுவதாக தீர்ப்பளிக்க வேண்டும் என தாக்கல் செய்யப்பட்ட மனுவில் மனுதாரர் குறிப்பிட்டிருந்தார். (நி-6)


## கண்ணீர் அஞ்சலி



யா/உரும்பிராய் சைவத்தமிழ்
வித்தியாலயத்தின் சங்கீத பாட
ஆசிரியை திருமதி சிவரஞ்சனி ரமணா
அவர்களின் மாமியார்

திருமதி. **இராஜேஸ்வரி வரதராஜ சர்மா**

அவர்கள் 08.07.2024
அன்று இறையடி சேர்ந்தார்.
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன்
அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(063)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.


## இராசிபலன்

16.07.2024
ஆனி 32, செவ்வாய்க்கிழமை
தசமி முன்னிரவு 6.28 மணிவரை

விசாகம் பின்னிரவு 12.52 மணிவரை
சுபநேரம் 10.30-12.00 மணிவரை
இராகுகாலம் 3.00-4.30 மணிவரை

சந்திராஷ்டமம் - பூரட்டாதி, உத்திரட்டாதி

வளவன்

**மேஷம்** – விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும்.

**கடகம்** – சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** – குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பணப்பிரச்சினை தீரும், காரிய வெற்றிக்கு இஷ்டதெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மகரம்** – உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அதிஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** – நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** – நண்பர்கள் சொல்லும் யோசனை நல்லதாகத் தெரியும், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், பணத்தேவைகள் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** – சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சேமிப்பு உயரும் நாள், சயனசுகக் குறைவான நாள்.

**கும்பம்** – குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வீண்பழிகள் அகலும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** – மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கன்னி** – வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**தனுசு** – தூரதேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** – உடல் நலனில் கவனம் தேவை, கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், முயற்சிகளில் சிறு தடை தாமதம் என்பன ஏற்படலாம்.

**பயத்தை வெளிக்காட்டி[illegible]எதிர்கொண்டு அழைப்பதாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதே என் நோக்கம்

## மன்னாரில் சஜித் உறுதி



**(மன்னார்)**

**நாட்டின் நீதிப் புத்தகத்தில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் எனவும் வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு வழங்குவதே எனது நோக்கம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மன்னாருக்கு நேற்று விஜயம் ஒன்றை மேற்கொண்ட இந்நிலையில் மன்னாரில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ அலுவலகத்திற்குச் சென்று கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனை சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மன்னாரின் அபிவிருத்திக்காக மீண்டும் ஒரு முறை மன்னார் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளேன். வடக்கு மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு வழங்குவதே எனது நோக்கமாக உள்ளது.

மேலும் முக்கியமாக நாட்டின் நீதிப் புத்தகத்தில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவேன்.

இன,மத வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரு தாய் பிள்ளைகள் போல் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு இந்த நாட்டை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல உள்ளேன். இந்த நாடு வங்குரோத்து அடைந்த நிலையில் உள்ளது.

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை மையப்படுத்தி நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க எண்ணியுள்ளேன். அதேவேளை மீனவர்களின் பிரச்சினைக்கு இராஜ தந்திர ரீதியில் தீர்வுகளை பெற்றுக் கொடுக்க எண்ணியுள்ளதோடு அதை வடக்கு, கிழக்கை மையப்படுத்தி தீர்வைப் பெற்றுத் தருவேன்.

மேலும் மாகாணசபை முறைமையை வலுப்படுத்தி அதை நிச்சயமாக பாதுகாக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார். -(நி-6-285)


## Invitation for Bids (IFB)
### KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

1. The Chairman , Local Authority Procurement Committee (LAPC) on behalf of the Karachchi Pradeshiya Sabha, A9 Road,Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Highway Construction** for grade mentioned in the table below with the construction Industry Development Authority (CIDA )
3. Bidding will be conducted through **National Competitive** Bidding (NCB).
4. Interested bidders may obtain further information from **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road Kilinochchi (T.P No : 021 228 5761, Fax No : 021 228 5690)** and inspect the bidding documents at the address given below **from 16.07.2024 until 30.07.2024 During 9.00 am to 2.00 pm** on Normal Working Days.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi**, from **16.07.2024 until 30.07.2024 from 9.00 am to 2.00 pm**. Upon payment of a non-refundable fee as mention below table. The method of payment will be **by cash.**
6. Bids shall be delivered in duplicate to the address to **The Chairman, Local Authority Procurement Committee (LAPC) , Karachchi Pradeshiya Sabha ,A9 Road, Kilinochchi** on or before **2.00 pm** on **30th July 2024** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders representatives who choose to attend.
7. All bids shall be accompanied by a "Bid-Security, as in the table below.
8. The pre-bid meeting will be held on **23.07.2024 at 10.00 am at the Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi.**

The address referred to above is (are):

Table-

| S.No | BID No. | Name of the Work | Estimated Cost (With Out VAT) (Rs.Mn) | Required Bid Security | | ICTAD Grade Required (Highways) | Bid Shall be Valid up to | Contract period | Non Refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Amount (Rs.) | Validity Period | | | | |
| 1 | NP/KN/KPS/ 2024/PSDG/01 | Construction of 5th Road (Kanakapuram road-GS Road) | 12.72 | 128,000.00 | 2024.11.12 | C 6 Or C 5 | 2024.10.15 | 3Months | 3500.00 |
| 2 | NP/KN/KPS/ 2024/Stamp Duty/ 01 | Re-Construction of Medras Road Stage -IV | 1.97 | 20,000.00 | 2024.10.15 | C 9 Or C 8 | 2024.09.17 | 3Months | 3500.00 |

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC )**
**Karachchi Pradeshiya Sabha, Kilinochchi.**

16.07.2024


## சமூகத்தை மாற்றும்
### அஸ்திரம் கல்வியே- ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

கல்வி மாத்திரமே சமூ கத்தை மாற்றக்கூடிய ஆயு தமாகக் காணப்படுகின்றது. ஆகவே சிறந்த கல்வியைப் பெற்றுக் கொள்வதைப் போலவே திறன் மேம்பாடுகளையும் அபிவிருத்தி செய்து கொள்வதுடன் நாட்டின் எதிர்காலத்தை மாற்றுபவர்களாக மாணவர்கள் உருவாக வேண்டும் என வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலவசக் கல்வியை வழங் கும் நாடுகளில் இலங்கை முன் னிலையில் உள்ளது. கொவிட் பெருந் தொற்று, பொருளாதார நெருக்கடி, இயற்கை அனர் த்தம் என நாடு நெருக்கடியான சூழ் நிலையில் காணப்பட்ட போதும், இலவச கல்வி மற்றும் மருத்துவ சேவைகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் பின் வாங்கவில்லை.

இளம் சமூகத்தினரின் கல்விக்கான முதலீடுகள் என்பது நாட்டின் முது கெலும்பாகும். இதன் அடிப் படையில் நாட்டில் இலவச கல்விமுறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக பாரிய அளவில் நிதி செலவிடப்படுகிறது என தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்தள்ளப்படும் இலங்கை பொருளாதாரம்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

**(கொழும்பு)**

**பொருளாதார சுதந்திரத்தில் 184 நாடுகளில் இலங்கை மேலும் 149 ஆவது இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளதாக இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட ஹெரிடேஜ் அறக்கட்டளையில் அறிக்கை வெளிப்படுத்துவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.**

பொருளாதார சுதந்திரம் என்பது ஒவ்வொரு தனிமனிதனும் தனது உழைப்பையும் சொத்துக்களையும் பயன்படுத்துவதற்கான அடிப்படை சுதந்திரமாகும்.

சட்டத்தின் ஆட்சி, அரசாங்கத்தின் அளவு, ஒழுங்குமுறை செயற்றிறன் மற்றும் திறந்த சந்தை ஆகியவற்றின் முக்கிய காரணிகளால் சுதந்திரம் தீர்மானிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது.

2000 ஆம் ஆண்டு பொருளாதார சுதந்திர சுட்டெண்ணில் 75 ஆவது இடத்தில் இருந்த இலங்கை 2016 இல் 93 ஆகவும் 2022 இல் 136 ஆகவும் குறைந்துள்ளதாக அந்த அறிக்கை கூறுவதாக பேராசிரியர் தெரிவித்தார்.

மேலும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 39 இடங்களில் இலங்கை 34 ஆவது இடத்தில் இருப்பதாகவும், பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் மற்றும் இலங்கையை விட இந்தியா மிகவும் முன்னேறி இருப்பதாகவும் வசந்த அத்து கோரள தெரிவித்தார். (நி-6)

# 4 மாதங்களில் 800 இற்கும் மேற்பட்ட பாதாள உறுப்பினர்கள் கைது



(கொழும்பு)

சமூகத்திலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களை இல்லாதொழிக்கும் செயற்பாடுகள் மிகச் சிறந்த திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி கடந்த மூன்று, நான்கு மாதங்களில் 800 இற்கும் மேற்பட்ட பாதாள உலக உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் மக்களின் பாதுகாப்பிற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6)

## எழுதுநர் பதவிக்கான வெளிவாரி விண்ணப்பம் கோரல்

முல்லை மாவட்ட சி.க.கூ சங்கங்களின் சமாசம் வெற்றிடமாகக் காணப்படும் எழுதுநர் பதவிக்கு வெளிவாரியாக 2024.07.16 ஆம் திகதி விண்ணப்பம் கோருகின்றது.

தகைமை கொண்ட விண்ணப்பதாரிகள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு தங்களின் பூரண சுய விபரங்களுடன் பிறப்புச் சான்றிதழ்,கல்வித் தகைமைச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழல் பிரதிகளுடன் விண்ணப்பத்தைத் தலைவர் முல்லை மாவட்ட சி.க.கூ சமாசம், வித்தியாபுரம், ஒட்டுசுட்டான் எனும் முகவரிக்கு 2024.07.31 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 12.00 இற்கு முன்னதாகக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**01) பதவி-எழுதுநர்**

சம்பள குறியீட்டு இலக்கம் -302/14
பதவி வெற்றிட எண்ணிக்கை -02
சம்பள அளவுத்திட்டம்- சுற்றறிக்கை 02/2022
19700-155X10-165X10-20100

**02) தகைமைகள்**- சுற்று நிருபம் 01/2024 இன் படி

அ. கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பள அளவுத்திட்ட பதவியில் எழுதுநர்/ காசாளர்/ கணனிப் பக்க உருவாக்குநர் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பள அளவுத்திட்டப் பதவியில் எழுதுநர்/ காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குநர் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

**அல்லது**

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப் பரீட்சையில் சித்தி, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் மொழி,கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களிலான சித்தி.

**குறிப்பு:-**

இப் பதவிக்கு அடிப்படைச் சம்பளத் திட்டங்களுக்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபப்படியான கொடுப்பனவுகள் கீழ்வருவன வழங்கப்படும்.
சுற்று நிருபம்-01/2022-5000
திகதி 2024.02.15-5000
சுற்று நிருபம் 04/2024-5000
மேற்படி கொடுப்பனவுகளுடன் காலத்திற்குக் காலம் ஆணைக்குழு வெளியிடும் சுற்று நிருபங்களுக்கு அமைவான கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

**வயதெல்லை** - 18-45 (சங்கத்தின் சேவையிலுள்ள பணியாளர்களுக்கு வயதெல்லை பொருத்தமற்றதாகும்)

முல்லை மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருக்க வேண்டும். வேறு கூட்டுறவுச் சங்கங்களில் பணியில் இருப்பவர்கள் விண்ணப்பிக்க விரும்பின் அவர்கள் கடமையாற்றும் சங்கங்கள், சபைகள், சமாசங்கள் ஊடாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.

கணனி அறிவு உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சமாசத்தால் கோரப்படும் பிணைப் பணத்தை வைப்பிலிட தயாராக இருத்தல் வேண்டும். (சி-798)

**தலைவர்,**
**முல்லை மாவட்ட சி.க.கூ சங்கங்களின் சமாசம்**
**வித்தியாபுரம், ஒட்டுசுட்டான்.**

**லங்கா மஹால் (PVT) LTD**
DHL
**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(354)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671**9
(161)
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
**077 839 3974**

**கல்யாணமாலை**
**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கேட்டை
1 இல் செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Software Engineer
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/14656

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூராடம்
7 இல் செவ்
கி.பா: 58
உயரம்: 6'1"
தகைமை/தொழில்: Bsc, Senior Software Engineer
எதிர்பார்ப்பு: Degree
தொ.இ: B/14657

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 17
7 இல் செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA, Teacher
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/14660

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 40
7 இல் செவ்
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: தொழில் புரியும் மணமகன்
தொ.இ: G/14694

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: ரேவதி
2 இல் செவ்
உயரம்: 4'11"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: G/14695

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மிருகசீரீடம்
உயரம்: 5'5"
கி.பா: 83
2 இல் செவ்
தகைமை/தொழில்: A/L, Pharmacist (Following) Canada
எதிர்பார்ப்பு: கனடாவில் உள்ள மணமகன்
தொ.இ: G/14697

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# 22 சக்கர கனரக லொறியை ஓட்டி அசத்தும் பெண்



(டுபாய்)

அரபு நாடுகளில் பெண்கள் வேலைக்கு செல்வது மிகவும் குறைவு என கூறப்படும் நிலையில் 22 சக்கர கனரக வாகனத்தை ஒரு பெண் ஓட்டி அசத்தியுள்ளார். டுபாயைச் சேர்ந்தவர் பவுசியா சஹ்ரான். 22 வயதான இவர் பிறக்கும் போதே தந்தையை இழந்துள்ளார். தாயின் அரவணைப்பில் வாழ்ந்த இவர் துணிச்சல் மிகுந்த பெண்ணாக வளர்ந்தார். வணிக வரி துறையில் பட்டம் பெற்ற இவர் ஆணுக்கு நிகராக பெண்ணால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைத்து கனரக வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் பெற விண்ணப்பித்தார்.

டுபாயில் கனரக வாகனத்திற்கான ஓட்டுனர் உரிமம் பெறுவது சுலபமல்ல. 2013 ஆம் ஆண்டு முதல் முறையாக இலகு ரக வாகன லைசென்ஸ் பெற்ற இவர் 9 ஆண்டுகளுக்கு பிறகு கனரக வாகன உரிமம் பெற முயற்சி செய்தார். கண், உடல் பரிசோதனையின் போது அதிகாரிகள் இவரை வியப்புடன் பார்த்தனர்.

ஆனாலும் தனது விடா முயற்சியால் முதல் முயற்சியிலேயே கனரக வாகன ஓட்டுனர் தேர்வில் தேர்ச்சி பெற்றார். புஜாராவில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் லொறி சாரதியாக சேர்ந்த இவர் 2 மற்றும் 3 அச்சுகள் கொண்ட 22 சக்கர கனரக வாகனத்தை ஓட்டி அசத்தி வருகிறார். (நி-6)

# சோமாலியாவில் மு

## கால்பந்தாட்ட இரசிகர்க

## 20 பேர் படுகாயம்

(மொகடிஷு)


**சோமாலியத் தலைநகரான மொகடிஷுவில் உள்ள ஒரு உணவகமொன்றில் பயங்கரவாதிகள் நடத்திய கார்குண்டுத் தாக்குதலில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.**



திப்
சோ
ஷ
கத்
தன

# தேர்தலை தோட்டாக்களால் எதிர்கொள்ளக் கூடாது

## அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்



(வோஷிங்டன்)

டொனால்ட் ட்ரம்புக்கும் தனக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தாம் எதிரிகள் அல்ல என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் மீதான துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அந் நாட்டு மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்துள்ள ஜோ பைடன்,

"எனது சக அமெரிக்கர்களே! நம் அரசியல் களத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிக்க விரும்புகிறேன்.

எனக்கும் ட்ரம்புக்கும் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் ஆனால் நாங்கள் எதிரிகள் இல்லை என்பதை உணர்த்த விரும்புகிறேன்.

நாம் அனைவரும் அமெரிக்கர்கள் என்ற வகையில் ஒன்றுபட்டு நிற்பது அவசியம். தேர்தலை வாக்குகள் மூலமாகத் தான் எதிர் கொள்ள வேண்டுமே தவிர தோட்டாக்களால் அல்ல.

அமெரிக்காவின் வரலாற்றை மாற்றும் உரிமை மக்களின் கைகளில் தான் இருக்க வேண்டுமே தவிர கொலையாளிகளின் கைகளில் இருக்கக் கூடாது. தாக்குதலுக்குப் பின்னர் ட்ரம்ப் நலமாக இருக்கிறார் என்பதை அறிந் தேன்.



இத்தாக்குதலில் உயிரிழந்த வரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கல். அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆறுதலைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நபரின் இலக்கு என்னவென்பது இன்னும் தெரியவில்லை. குற்றத்தில் ஈடுபட்ட சந்தேக நபர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைப் பற்றிய விசாரணைகளை பொலிஸ்துறை மேற்கொண்டுள்ளது.

அமெரிக்க முன்னாள் ஜனாதி பதி மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட் டுள்ளது. அவரது ஆதரவாளர் கொல்லப்பட்டுள்ளார்.

அமெரிக்கா இதுபோல கீழ் நிலைக்கு இறங்கக் கூடாது. அமெ ரிக்காவில் இதுபோன்ற வன்முறைக்கு இடமில்லை.

வன்முறை எப்போதும் எதற் கான விடையையும் பெற்றுத் தந்ததில்லை. இத்தகைய வன்முறைச் சம்பவங்களை நம் நாட்டில் அனுமதிக்கவே முடியாது.

அமெரிக்கர்கள் எதிரெதிர் அரசியல் கருத்துகளைக் கொண்டவர்களை மதிக்க வேண்டும். நம் சமூகத்தைப் பிரிக்க அந்நிய சக்திகள் முயற்சிக்கலாம் அதற்கு நாம் இரையாகிவிடக் கூடாது" என குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# யாருக்குப்

## அஞ்சப் போ

## டொனால்ட

(வோஷிங்டன்)

தன் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தை கண்டு தாம் அஞ்சப்போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தீவிர தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பென்சில்வேனியாவில் பிரசாரக் கூட்ட மொன்றில் கலந்து கொண்டு அவர் உரையாற்றிய வேளை மர்ம நபர் ஒருவர் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

இத்தாக்குதலில் காயமடைந்த ட்ரம்ப் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். இதே வேளை துப்பாக்கி பிரயோகம் மேற் கொண்டவர் 20 வயதுடையவர் என உறுதிப்படுத்தப்பட்டுள்

எத
யெ
நில
யே
குறி
காட்
அதி
சூட்
ஸ்த
தெ
இவ
ஒரு
இரு
தின்
இரு
அவ
ட்ர
எந்
பய
டொ
ளா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு



# ல குண்டு வெடிப்பு!

## ர்கள் 7 பேர் உயிரிழப்பு!



யூரோ 2024 கோப்பை இறுதிப் போட்டியை காண்பதற்காக சோமாலியா தலைநகர் மொகடிஷூவில் உள்ள ஒரு உணவகத்தில் இரசிகர்கள் குவிந்திருந்தனர்.

திடீரென சக்திவாய்ந்த கார் வெடிகுண்டு வெடித்ததில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த குண்டு வெடிப்பில் சுமார் 20 பேர் படுகாயமடைந்தனர்.

வில்லா சோமாலியா என அழைக்கப்படும் ஜனாதிபதி மாளிகை வளாகத்திற்கு அருகில் இந்த குண்டுவெடிப்பு சம்பவம் நடைபெற்றுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (நி-6)

## கும் நான்

## போவதில்லை

## ல்ட் ட்ரம்ப்

ளது. குறித்த சந்தேக நபர் கூரையொன்றின் மீது பதுங்கியிருந்த நிலையில் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

டொனால்ட் ட்ரம்பிற்கு பாதுகாப்பு வழங்கிவந்த இரகசியதுறை அதிகாரி நடத்திய பதில் துப்பாக்கிச் சூட்டில் குறித்த துப்பாக்கிதாரி ஸ்தலத்திலேயே பலியானதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அத்துடன் துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான ட்ரம்பின் ஆதரவாளர் ஒருவரும் பலியானதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் இந்த தருணத்தில் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டியது மிகவும் அவசி யமாகும் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அத்துடன் எந்த அச்சுறுத் தலுக்கும் தான் பயப்படப் போவதில்லை என்றும் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (நி-6)

## 'அணுசக்தி வழிகாட்டல்'

### அமெரிக்கா-தென்கொரியா ஒப்பம்



(பியாங்யாங்)

அமெரிக்காவும் தென்கொரியாவும் கையெழுத்திட்ட "கொரிய தீபகற்பத்தில் அணுசக்தி தடுப்பு மற்றும் அணுசக்தி நடவடிக்கைகளுக்கான வழிகாட்டுதல்களுக்கு" கொரியா ஜனநாயக மக்கள் குடியரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

அதிகாரபூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் வடகொரியாவின் இராணுவப் படைகள் "அதன் சக்தி வாய்ந்த அணு ஆயுதப் போரைத் தடுக்கும் தயார் நிலையுடன் தேசிய பாதுகாப்பிற்கு எல்லா வகையிலும் உத்தரவாதம் அளிக்கும்" என்று கூறியது.

வடகொரியாவுக்கு எதிரான அணு ஆயுதப் போருக்கான தயாரிப்புகளை முடுக்கி விடுவதற்கான" நோக்கம் கொண்ட அணு ஆயுத வழிகாட்டுதல்களை அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் மரபுவழிப் படைகளை ஒருங்கிணைத்து, "பிராந்திய இராணுவ பதற்றங்களைத் தள்ளும்" என்றும் தெரிவித்தது. (நி-6)

## நேபாளத்தின் புதிய பிரதமராக கே.பி.சர்மா ஒலி பதவியேற்பு



(காத்மண்டு)

நேபாளத்தில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி-ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சித் தலைவர் கே.பி.சர்மா ஒலி நேற்று புதிய பிரதமராக பதவியேற்றுக் கொண்டுள்ளார்.


நேபாள பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் முன்னாள் பிரதமர் புஷ்ப கமல் தாஹால் பிரசண்டா தோல்வியைச் சந்தித்தார்.

இதையடுத்து அந்நாட்டு ஜனாதிபதியைச் சந்தித்த கே.பி.சர்மா ஒலி தனது தலைமையில் ஆட்சி அமைக்க உரிமை கோரியிருந்தார்.

அதன்படி ஜனாதிபதி ராம் சந்திர பவுடலால் புதிய பிரதமராக சர்மா ஒலியை நேற்று முன்தினம் நியமிக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை உத்தியோகப்பூர்வமாக பதவியேற்றுக் கொண்டார்.

அதன்படி அந்நாட்டின் பிரதமராக சர்மா ஒலி நான்காவது முறையாகவும் பதவியேற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## 1 லீற்றர் தண்ணீரின் விலை 1,390 டொலர்களா?



(டோக்கியோ)

மனிதர்களின் அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளில் ஒன்று குடிநீர். ஆனால் ஆடம்பர போத்தல் குடிநீர் பயன்பாடு என்பது தற்போது பெருவசதி படைத்தவர்களிடையே உருவாகியுள்ளது.

அந்த வகையில் உலகின் மிக விலை உயர்ந்த போத்தல் குடிநீராக ஜப்பானில் தயாரிக்கப்படும் "பிலிகோ ஜூவல்லரி வாட்டர்" உள்ளது.

இதன் ஒரு லீற்றர் விலை ஆயிரத்து 390 டொலர்கள்.

இது மிக மிகத் தூய்மையானது என்பதுடன் ரொம்ப ஆடம்பரமான போத்தல்களில்தான் நிரப்பப்பட்டு வருகிறது. இந்த போத்தல்கள் விலை உயர்ந்த ஸ்வரோவ்ஸ்கி கற்களால் ஆபரணம் போல வடிவமைக்கப்படுகின்றன.

தங்க அலங்காரங்கள் மற்றும் சிக்கலான வடிவமைப்புகளைக் கொண்ட உன்னிப்பாக கவனத்துடன் செய்யப்பட்ட கைவினைப் பொருளாக இந்த போத்தல் உருவாக்கப்படுகிறது.

இதில் நிரப்பப்படும் நீர் ஜப்பானின் கோபேயில் உள்ள இயற்கை நீரூற்றில் இருந்து பெறப்படுகிறது. இந்த தண்ணீர் மிக உயர் தரமானதாக கருப்படுகிறது.

ஆடம்பரத்தை விரும்புவோர், அதற்காக தயங்காமல் பணத்தை அள்ளிவிடத் தயாராக இருப்போரை இந்த தண்ணீருடன், இதன் ஆடம்பர போத்தல் அலங்காரமும் கவர்கிறது.

இந்த பூமியில் சுத்தமான குடிநீரைப் பெறுவதே கோடிக்கணக்கான மக்களுக்கு கனவாக உள்ளது. ஆனால் சிலருக்கோ. குடிக்கும் நீருக்கு, கற்பனை செய்ய முடியாத அளவுக்கு பணம் செலவழிக்க முடிகிறது. அதையும் கூட தங்கள் அந்தஸ்தின் அடையாளமாக கருதுகிறார்கள்.

முரண்பாடுகளின் மொத்த உருவமாய் நம் உலகமே உள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்டஈட்டை செலுத்த 6 ஆண்டுகள் கேட்கும் மைத்திரி



(கொழும்பு)

ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கில் தாம் செலுத்த வேண்டிய நட்டஈட்டில் 58 மில்லியன் ரூபாயை செலுத்தியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர்நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

எஞ்சிய தொகையைச் செலுத்துவதற்கு மேலும் ஆறு வருடகால அவகாசம் வழங்குமாறுமுன்னாள் ஜனாதிபதி தமது சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றில் கோரியுள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குழுவினரால் அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக் குத் தொடர்பாக, உயர்நீதி மன்றம் கடந்த வருடம் ஜனவரி மாதம் தீர்ப்பை அறிவித்தது.

குறித்த தீர்ப்பில் முன்னாள் ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு 100 மில்லியன் ரூபாயினை நட்டஈட்டாகச் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்தது. (நி-6)

# மீண்டும் தொடர் வேலை நிறுத்தம்
## ரயில் நிலைய அதிபர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

தமது கோரிக்கைகளை அமைச்சரவையில் சமர்ப்பித்து தீர்வுகளை வழங்குவதாக போக்குவரத்து அமைச்சர் வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படாவிட்டால் மீண்டும் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக ரயில் நிலைய அதிபர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமது சங்கம் இன்று கூடி இறுதித் தீர்மானத்தை எடுக்கவுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

இதேவேளை பல்கலைக் கழகத்தின் கல்விசாரா ஊழியர்களின் நிறைவேற்று தர அதிகாரிகள் பணிக்கு சமூகமளிக்க தீர்மானித்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்கவுடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னரே அவர்கள் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர் (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 200-250 | 200 |
| உருளைக்கிழங்கு | 340 | 350 | 300 | 400 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 400-500 | 500 |
| தக்காளி | 350 | 400 | 260 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 380 | 160 | 130-150 | 200 |
| கோவா | 350 | 450 | 350 | 350 |
| கரட் | 350 | 450 | 400 | 450 |
| பூசணி | 180 | 200 | 150 | 250 |
| புடோல் | 160 | 300 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 260 | 160-200 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 300 | 250-450 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 230 | 200 |
| பாகற்காய் | 1200 | 700 | 750 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 450 | 250-300 | 350 |
| லீக்ஸ் | 550 | 500 | 400 | 500 |
| பீற்றூட் | 400 | 480 | 450 | 400 |
| கறிமிளகாய் | 800 | 700 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 400-550 | 800 |
| போஞ்சி | 800 | 650 | 400 | 800 |
| கத்தரி தம்புள்ள | 250 | 150 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 80 |
| தேசிக்காய் | 800 | 700 | 450-500 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | -- | 500 |
| வெங்காயப்பூ | 450 | 350 | -- | 500 |
| முள்ளங்கி | 140 | 120 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 100 | 80 |
| ஈரப்பலா | 120 | 80 | 100 | 80 |

# இன்று ஒரு தகவல் 184



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## விரும்பப்படுவது எப்படி?

என்னைக் கண்டாலே எல்லோரும் விலகி ஓடுகிறார்கள் சார். யாருமே நெருங்கி வருவதில்லை. என்னுடைய முகராசி அப்படி என்று சிலபேர் சொல்வதுண்டு. இப்படி சொல்கின்றவர்கள் பேரில் தான் குறையே தவிர அடுத்தவர்களை இதற்காக குறை சொல்ல முடியாது. மற்றவர்களிடம் பேசுவதும் பழகுவதும் ஒரு கலை. சிலருக்கு இயற்கையாகவே இது அமைந்திருக்கும். அப்படி இல்லாவர்கள் இதனை பழக்கப்படுத்திக் கொள்ளலாம். சிறிது முயற்சி செய்ய வேண்டும் அவ்வளவு தான். பொழுது விடிந்து பொழுது போனால் எத்தனையோ பேரிடம் நாம் பேச வேண்டியிருக்கிறது. பழக வேண்டியிருக்கிறது.

சொந்தக்காரர்கள், அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள், அலுவலகத்திலே ஒன்றாக வேலை செய்பவர்பகள், வீட்டிலே வேலை செய்கின்ற அம்மா, காய்கறி விற்கின்ற அம்மா அப்படி எத்தனையோ பேரைப் பார்க்க வேண்டியிருக்கிறது. பேச வேண்டியிருக்கிறது. அவர்கள் அவர்களுக்குத் தகுந்த மாதிரி பிரியமாகப் பேசிப் பழகுவது ஒரு கலை. அப்போது தான் எல்லோரும் எங்களிடம் பிரியமாக இருப்பார்கள். அடுத்தவர்கள் எங்கள் மேல் பிரியமாக இருக்க வேண்டும் என்றால் அவர்களிடம் போய் நின்று என் மேலே கொஞ்சம் பிரியமாக இரு என்று கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது. நீங்கள் நடந்து கொள்கின்ற முறையைப் பார்த்து அவர்களாக உங்களை விரும்ப வேண்டும். சரி எப்படி நடந்து கொள்வது?

இனிமையாகப் பேசுகின்ற தன்மை, அடக்கமான குணம், உதவி செய்கின்ற மனப் பான்மை, பெருந்தன்மை இந்த குணங்களை எல்லோருக்கும் பிடிக்கும். அதனாலே இது போன்ற குணங்களை வளர்த்துக் கொள்வது நல்லது. அதை விட்டுவிட்டு என் குணம் இது தான் இதை ஏற்றுக் கொள்பவர்கள் என்னிடம் வரட்டும் அது போதும் என்று சொன்னால் நாங்கள் பாட்டுக்கு தனியாக இருக்கவேண்டியது தான். நமக்கு ஒருவரை பிடிக்கவில்லை என்றால் அனேகமாக அதற்கு காரணம் அவர்கள் எங்களை மதிக்கவில்லை என்கின்ற குறையாகத் தான் இருக்கும். மற்றவர்கள் எங்களை மதிக்கின்ற அளவுக்கு நடந்து கொண்டால் நமக்கு எல்லோரிடமும் பிரியம் ஏற்பட்டு விடும்.

இன்னொருவரிடம் உள்ள எந்தக் குணம் நமக்கு பிடிக்கவில்லையோ அதே குணம் எங்களிடம் இல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும். நான்கு பேரிற்கு மத்தியில் இருக்கின்ற போது நாங்கள் சிரித்தால் மற்றவர்களுக்கும் சிரிப்பு வரும். அதனாலே சிரிக்கப் பழகுவது நல்லது. எங்கள் வாழ்கையில் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் உண்டு. இல்லை என்று சொல்லவில்லை. இருந்தாலும் அவற்றிற்கு மத்தியில் நாம் சந்தோஷப்படுவதற்கும் நிறைய விடயங்கள் இருக்கின்றது. அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

முதல் தடவையாக நாம் ஒருவரைப் பார்கின்றோம். அவர் சிரிக்கவில்லை என்றால் மிகவும் கரவம் உள்ள ஆளாக இருப்பரோ என்று நினைக்கத் தோன்றும். அப்படி இருக்கக்கூடாது. ஒருவருக்கொருவர் கொஞ்சம் சிரித்துக் கொண்டால் மனதில் உள்ள இறுக்கம் போய்விடும்.அதன்பின் கலகலப்பாக பேசுவதற்கு அது வசதியாக இருக்கும். நாம் பேசுகின்றபோது அதை மற்றவர்கள் கேட்க வேண்டும் என்று ஆசையாக இருக்கின்றதா இல்லையா? அதே மாதிரித் தானே அவர்களுக்கும் இருக்கும். அதனால் மற்றவர்கள் பேசுவதை காது கொடுத்து கேட்க வேண்டும்.

ஒரு நண்பன் என்னிடம் சார் இன்றைக்கு வருகின்ற வழியில் ஒரு பத்து அடி வாய்க்காலை ஒரே தாண்டாகத் தாண்டி வந்துவிட்டேன் என்று அளக்க ஆரம்பித்து விட்டக்கூடாது. அது என்ன சார் பெரிய பிரமாதம் நான் நேற்று 20 அடி வாய்க்காலை ஒரே அடியாக தாண்டி விட்டேன் என்று அளக்க ஆரம்பித்து விட்டக்கூடாது. நீங்கள் உண்மையாகவே 20 அடியை தாண்டியிருந்தாலும் அதை இன்னொரு சந்தர்ப்பத்தில் சொல்லியிருக்கலாமே. சில பேருக்கு அடுத்தவர்கள் செய்கின்ற நல்ல காரியம் கண்ணில் படாது. ஏதாவது தவறுதலாக செய்து விட்டால் அது தான் பெரிதாகத் தெரியும்.

தினமும் வீட்டுக்கு காய்கறி கொண்டு வந்து கொடுக்கின்ற அம்மா எவ்வளவு நாளாக காய்கறி கொடுத்துக் கொண்டிருப்பார்கள் அதையெல்லாம் மறந்து விடுவோம். இன்றைக்கு ஒரு நாள் அவர்கள் கொடுத்த வெண்டிக்காய் முத்தலாக போய்விட்டால் அதை மட்டும் மறக்காமல் அவர்களிடம் சொல்லுவோம். நேற்றுக் கொடுத்த கத்தரிக்காய் இளசாக இருந்தது. மிகவும் நல்லாக இருந்தது என்று சொல்ல தோன்றாது. அப்படி நல்லதை பாராட்டுகின்ற குணத்தை வளர்த்துக் கொண்டால் எங்கள் மேல் எல்லோருக்கும் ஒரு விருப்பம் ஏற்பட்டு விடும். இன்னொரு விடயம் எல்லோருக்குமே தன்மானம் உண்டு. எவருக்குமே அவர்களைப் பற்றி விமர்சனம் செய்வது, குறையை சுட்டிக்காட்டுவது பிடிக்காது. அதை நாம் மறந்து விடக்கூடாது.

இவ்வளவு விவரம் தெரிந்த இரண்டு நண்பர்கள் சந்தித்துக் கொண்டார்கள். ஒருவர் சொன்னார் நான் வீட்டிலே மிகவும் சாமர்த்தியமாக நடந்து கொள்கிறேன். சத்தமே போட மாட்டேன். அதனாலே என் மனைவி என்னைத் திட்டுவதில்லை என்றார் மிகவும் பெருமையாக. இதைக் கேட்டதும் இன்னொருவர் சார் நான் எங்கள் வீட்டிலே அப்படி ஒன்றும் சாமர்த்தியமாக நடந்து கொள்வதில்லை. நிறைய சத்தம் போடுவேன். அப்படி இருந்தால் கூட நானும் திட்டு வாங்குவதில்லை என்றார். அது எப்படி என்று ஆச்சரியமாகக் கேட்டார் அவர். அது ஒன்றும் பெரிய ஆச்சரியமில்லை ஏனென்றால் எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை என்றார் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோக நெற்செய்கையில் மடிச்சுக்கட்டி தாக்கம்

## விவசாயிகள் கவலை

(அக்கராயன்)

**முல்லைத்தீவு வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பிரிவில் உள்ள வயல் நிலங்களில் மடிச்சுக்கட்டி தாக்கம் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

தற்போது இப் பிரிவில் உள்ள நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இப் பயிர்ச் செய்கையிலேயே மடிச்சுக்கட்டி தாக்கம் காணப்படுவதாகவும் வழமையை விட கூடுதலான தடவை சிறுபோகத்தில் கிருமி நாசினி வயலில் தெளிக்க வேண்டி உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

முன்னெடுக்கப்படும் சிறுபோக நெற்செய்கையில் நெற்கதிர்கள் துளிர் விடும் காலப்பகுதியில் குறித்த தாக்கம் பரவலடைந்துள்ளது என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். (நி-6-350)

# 'சியாப்' திட்டத்தின் கீழ் 3 குளங்கள் புனரமைப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவின் மூன்று குளங்களான ஐயன்கன்குளம், பழைய முறிகண்டிகுளம், கோட்டைக்கட்டியகுளம் என்பன சியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட உள்ளன.

இக் குளங்களை புனரமைப்பதற்கு தலா ரூபாய் அறுபது மில்லியன் நிதி கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி குளங்களை புனரமையுங்கள் என 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்சியாக இக்குளங்களின் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்த நிலையிலும் நீர்ப்பாசனத் திணைக்களத் திற்கு கிடைக்கப் பெறுகின்ற நிதியில் முன்னெடுக்கப்பட்ட வேலைகள் அரைகுறையாக வும் காணப்படும் நிலையில் தற்போது கிடைத்துள்ள நிதியினை கொண்டு குளங்களை முழுமையாக புனரமைக்க முடியும் என நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளினால் தெரிவிக்கப்படுகின்றது. (நி-6-350)

# கௌதாரிமுனை விநாசிஓடையில் இறால் பண்ணை திறந்து வைப்பு



(தருமபுரம்)

பூநகரி கௌதாரிமுனை விநாசி ஓடை கிராமத்தில் நவீன இறால் பண்ணை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

1000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் Ceylon sea food farm நிறுவனத்தினால் 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த இறால் பண்ணையின் முதற் கட்ட பணி களுக்காக இதுவரை 500 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

பண்ணை முதலீட்டாளர்களின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இச் சந்திப்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்நெக்டா நிறுவன உத்தியோகத்தர்கள், கிராம சேவகர் மற்றும் அங்கு பணியாற்றும் உள்ளூர் தொழிலாளர்கள் எனப் பலரும் கலந்துக் கொண்டிருந்தனர். (நி-6-316)



கிளிநொச்சி மாவட்டத்திற்கு அளப்பரிய சேவையாற்றிய ஆசிரியர் சாரணன் கலாநிதி மா.புவனேந்திரன் பற்றிய புவனம் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்: தேவானந்தன்)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3170

**ருக்ஷா**




**ராகவ்**




**கோபி**




**சந்தியா**




**கயூரன்**




**தனா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 534





பூங்குழலி! உன்னைப் பார்ப்பதற்காகவும், உன் இனிய கானத்தைக் கேட்பதற்காகவும் தஞ்சையிலிருந்து பலநாள் பிரயாணம் செய்து வந்தேன். இங்கே வந்த பிறகும் உன்னைக் காணாமல் இத்தனை நாள் காத்துக் கொண்டிருந்தேன்! தற்செயலாக உன்னைப் பார்த்து விட்டுத் தொடர்ந்து ஓடிவந்தேன். ஏன் அப்படி ஓடினாய்? எங்கே, ஒரு கீதம் பாடு கேட்கலாம்!

பாடுவதற்கு நல்ல இடம் அதைவிட நல்ல சந்தர்ப்பம்!

"நீ பாடாவிட்டால் நானே இன்னொரு பாட்டுப் பாடுகிறேன். இந்தக் காட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் மிருகங்களை யெல்லாம் விழித்தெழுந்து ஓடச் செய்கிறேன், பார்!"

"பித்தா! பிறைசூடி பெருமானே அருளாளா!" போதும், அத்தான்! கொஞ்சம் பாட்டை நிறுத்து!

"அப்படியானால் நீ பாடுகிறாயா?" இவ்விதம் இரைந்து கேட்டுவிட்டுச் சேந்தன் அமுதன் உடனே மெல்லிய குரலில், "பூங்குழலி! உன்னைத் தொடர்ந்து இன்னொருவன் வந்து கொண்டிருந்தான். உனக்கு எச்சரிக்கை செய்வதற்காகவே சத்தம் போட்டுப் பாடினேன். அவனுக்கும் உன் அண்ணன் மனைவிக்கும் இன்று சாயங்காலம் ஏதோ இரகசியசம்பாஷணை நடந்தது. அவன் யார் என்று உனக்குத் தெரியுமா?" என்றான்.

பிறகு மீண்டும், உரத்த குரலில், "என்ன சொல்லுகிறாய்! நீ பாடுகிறாயா? நான் பாடட்டுமா? சிவபெருமான் சுடுகாட்டில் ஆடினார் நீ வெறுங்காட்டில் பாடக் கூடாதா?" என்று இரைந்தான்.

"இதோ பாடுகிறேன் கோபித்துக் கொள்ளாதே!" என்று சொல்லிவிட்டுப் பூங்குழலி பின்வருமாறு பாடினாள்:

"பறக்கும் எம் கிள்ளைகாள்! பாடும் எம் பூவைகாள்!
அறக்கண் எனத்தகும் அடிகள் ஆரூரரை மறக்க கில்லாமையும்
வளைகள் நில்லாமையும் உறக்கமில்லாமையும்
உணர்த்த வல்லீர்களே!",

இவ்விதம் பாடிவிட்டு மெல்லிய குரலில், "அமுதா! நான் வந்தது உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

பூங்குழலி! கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து படகு வருவதைப் பார்த்தேன். நீயாக இருக்கலாம் என்று உத்தேசமாக எண்ணி இங்கே உன்னைத் தேடி வந்தேன். அதே சமயத்தில் பழுவூர் ஆட்கள் சிலரும் இந்தப் பக்கம் வந்தார்கள். படகில் உன்னைக் காணவில்லை. ஆனால் என் நண்பன் வல்லவரையனையும் இளவரசரையும் பார்த்தேன். வல்லவரையனிடம் பழுவூர் ஆட்கள் வருவது பற்றிக் கூறினேன். பிறகு இளவரசரை நாங்கள் இருவருமாகத் தூக்கிக் கொண்டு போய் மறைந்த மண்டபத்தில் சேர்த்தோம்."

"ஐயோ! என்ன தவறு செய்துவிட்டீர்கள்! படகு என்ன ஆயிற்று!

"படகை யாராவது பார்த்தால் சந்தேகம் ஏற்படும் என்று ஓடை நீரில் கவிழ்த்து விட்டோம்! ஏன் பூங்குழலி! பாட்டை ஏன் நிறுத்திவிட்டாய்! மிச்சத்தையும் பாடு!" என்று பிற்பகுதியை உரத்த குரலில் கூறினான் சேந்தன் அமுதன்.

"மறந்து விட்டது அமுதா இந்தக் கோடிக்கரைக் குழகரைப் பற்றி ஒரு பாடல் உண்டே! உனக்கு அது நினைவிருக்கிறதா?- நினைவிருந்தால் பாடு!"


"ஓ! நினைவிருக்கிறது!" என்று சேந்தன் அமுதன் இரைந்து சொல்லிவிட்டுப் பாடினான்: "கடிதாய்க் காற்று வந்தெற்றக் கரை மேல் குடிதானயலே இருந்தால் குற்றமாமோ? கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர் அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே!"

பாட்டு முடிந்தவுடனே பூங்குழலி, "அத்தான்! என்னைத் தொடர்ந்து வந்தவன் போய்விட்டானா? பக்கத்தில் மறைந்து நின்று கொண்டிருக்கிறானா?"(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## எல்லா உயிர்களுக்கும் உதவிசெய்



ஒரு நாட்டு ராஜாவிடம் முத்தன் வேலை செய்து வந்தான். அந்த ராஜாவுக்கு மிருகங்கள் பறவைகள் பேசும் பாஷை தெரியும். முத்தனுக்கு ஒரே ஆச்சரியம், எப்படி ராஜா விலங்குகள் பேசுவதை அறிந்து கொள்கிறார் என்பது அவனுக்கு வியப்பாக இருந்தது. முத்தன் தான் அந்த ராஜாவுக்கு தினமும் உணவு கொண்டு கொடுப்பான். ராஜாவின் உணவில் ஒரு பகுதி மட்டும் தனியாக தனிப் பெட்டியில் ராணியே சமைத்துத் தருவாள்.

ஒரு நாள் முத்தன் அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தான். அந்த பெட்டிக்குள் ஏதோ துண்டு துாண்களாக சமைத்து வைக்கப் பட்டிருந்தன. இது என்னவாக இருக்கும் என்று ஒரு துண்டை எடுத்து சாப்பிட்டுப் பார்க்கிறான். அதைச் சாப்பிட்டதும் முத்தனுக்கு பறவை மிருகங்களின் பேசும் பாஷை புரிய ஆரம்பிக்கிறது. புதிய சக்தி கிடைத்ததும் அவன் அரண்மனையில் இருந்து அப்படியே புறப்பட்டு கிளம்பி விடுகிறான்.

அவன் குதிரையில் கிளம்பிச் செல்லும் வழியில் எறும்புகள் சாரை சாரையாக போவதை பார்த்தான், எறும்பின் தலைவன் இவனிடம் குதிரையை எறும்புகளை மிதிக்காத வண்ணம் செலுத்தும்படி வேண்டிக் கொண்டது. அவனும் அப்படியே செய்தான். எறும்புகள் நன்றி தெரிவித்து, என்றேனும் உங்களுக்கு உதவுவேன் என்று கூறியது.

அடுத்து, அவன் செல்லும் வழியில் குளம் இருந்தது அங்கு மூன்று மீன்கள் அழும் குரல் கேட்டது. அவை புதருக்குள் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தன. குளத்தில் தாவிக் குதிக்கும் போது அவை தவறிப் புதரில் விழுந்திருந்தன.

அத்தனையும் காப்பாற்றி தண்ணீருக்குள் மீண்டும் எடுத்துவிட்டு கிளம்பினான். மீன்களும் நன்றி தெரிவித்தது.

அவன் கொஞ்ச தூரம் ஒரு காட்டைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தான். சின்னஞ்சிறு காகங்களின் குரல் கேட்டது. தாய் காக்கை அவைகளிடம் "நீங்களே உங்கள் உணவைத் தேடிக் கொள்ளுங்கள்" என்று கூறி மரத்தில் இருந்து கீழே தள்ளி விட்டிருந்தது. அவைகளுக்கு தானியங்களை உணவாக கொடுத்து விட்டு கிளம்பினான். அவை மிகுந்த மகிழ்ச்சியுடன் நன்றி கூறின.

அதன் பின் காட்டைக் கடந்து அவன் வேறு ஒரு நாட்டுக்குள் நுழைந்தான். ஊரே கோலாகலமாக இருந்தது.

அந்த நாட்டு இளவரசி தன் கணவனைத் தேர்ந்தெடுக்கும் சுயம்வரம் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தாள். வேலைக்காரனுக்கு ஆசை, எப்படியும் இந்தப் போட்டியில் கலந்து கொண்டு நாம் இந்த நாட்டின் அரசனாக வேண்டும் என ஆசைப்பட்டான்.

போட்டியில் கலந்து கொண்டான். போட்டியில் வெற்றி பெறவில்லை என்றால் சிறையில் தள்ளி விடுவார்கள். போட்டி ஆரம்பம் ஆனது, அவனை ஒரு குளத்திற்குக் கூட்டிப் போனார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம் – *சிம்மன்ஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒரு தேர்தலை நடத்துவதற்கே ஒரு ஜனநாயக நாடு படும்பாடு

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் 2024ஆம் ஆண்டு நடந்தாக வேண்டும்.

இருந்தும் தேர்தல் நடக்குமா? இல்லையா? என்ற வாதப் பிரதிவாதம் 2024ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இன்றுவரை நீடித்து வருகிறது.

போதாக்குறைக்கு ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் எனக் கோரியும் ஜனாதிபதித் தேர்தலுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டுமெனவும் நீதிமன்றம் சென்ற சம்பவங்களும் உண்டு.

பொதுவில் ஜனநாயக நாடுகளில் தேர்தல் என்பது உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும். அதுவே ஜனநாயகத்தின் இயல்பு.

ஆம், இந்தியாவில் அண்மையில் நடந்த பொதுத் தேர்தல், பிரிட்டனில் நடந்து முடிந்த தேர்தல், அமெரிக்காவில் நடைபெறப் போகின்ற ஜனாதிபதித் தேர்தல் என்பன உள்ளிட்ட ஜனநாயக நாடுகளில் தேர்தல்கள் ஒழுங்குமுறையில் நடந்தாகின்றன.

ஆனால் இலங்கையில் மட்டும் தேர்தலை நடத்துவதென்பது மலையைக் கட்டி இழுப்பது போல அமைகிறது.

ஆம், ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்கு வந்த பின்னர் ஜனநாயகம் என்பது கேள்விக்குரியதாயிற்று.

ஆட்சியில் கோலோச்சுவதற்காக ஜே.ஆர். ஜெயவர்த்தன கொண்டு வந்த நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை இலங்கையின் ஜனநாயகத்தைப் பழுதடையச் செய்துள்ளது.

தவிர, ஒருவர் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருக்கலாம் என்ற அரசியலமைப்பை மாற்றி மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாக இருக்க முடியும் எனத் திருத்தங்கள் கொண்டு வருவதற்கு ராஜபக்ஷ தரப்பு முயற்சி செய்தமையும் தெரிந்தவையே.

ஆக, இலங்கையில் பொதுத் தேர்தல் மூலமாக அல்லது ஜனாதிபதித் தேர்தல் ஊடாக ஆட்சி அதிகாரத்துக்கு வருகின்ற தரப்பு ஜனநாயக முறைமையின் கீழ் உரிய காலத்தில் தேர்தலை நடத்துவதற்கு விருப்பம் கொள்வதாக இல்லை.

இந்த அடிப்படையிலேயே ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா? இல்லையா? என்ற விவாதம் நீண்டு செல்கிறது.

இங்குதான் இலங்கையின் ஜனநாயகம் எத்துணை தூரம் பலவீனமாக உள்ளதென்பது புரிகிறது.

உண்மையில் நாட்டில் அரகல போராட்டம் இடம்பெறாமல் இருந்திருக்குமாயின், இங்கு இராணுவ ஆட்சிகூட ஏற்படுவதற்கு வாய்ப்பு உருவாகியிருக்கும்.

ஏதோ மக்கள் திரண்டெழுந்து ஆட்சியாளர்களை ஓட ஓடத் துரத்தியதன் பயனாக ஜனநாயகம் ஓரளவுக்குப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

இருந்தும் ஆட்சிக்கு வருகின்றவர்கள் தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்கு விரும்புகின்ற சிறுமைத்தனம் இருக்கும் வரை ஒவ்வொரு தேர்தல் காலமும் சிக்கல் நிறைந்ததாக – தேர்தல் நடக்குமா? இல்லையா? என்ற கேள்வி எழுவதாக நிலைமை இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

# பிரித்தானியா எடுத்துச் சென்ற தொல்பொருட்களை மீட்க நடவடிக்கை

## புத்தசாசன அமைச்சர் விதுர விக்ரமநாயக்க

(கொழும்பு)

தாரா தேவியின் சிலை உட்பட காலனித்துவ காலத்தில் நாட்டிலிருந்து பிரித்தானியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்ட பல தொல்பொருட்களை மீண்டும் இந் நாட்டுக்கு பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெதர்லாந்திலிருந்தும் இதே போன்ற பல தொல்பொருட்கள் மீண்டும் எமக்குக் கிடைத்துள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டுக்கும் கலாசாரத்துக்கும் ஏற்ற கல்வி முறையொன்று எமது நாட்டில் உருவாக்கப்பட வேண்டுமெனவும் அதன் ஊடாக நாட்டை நேசிக்கும் பெருமை மிக்க மக்களை உருவாக்க வேண்டுமெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ம-7)

## இலங்கை ஜோர்டான் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கை மற்றும் ஜோர்டான் அரசாங்கங்கள் பரஸ்பர ஆர்வமுள்ள பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

அந்த நாட்டில் உள்ள இலங்கை தூதரகத்தின் தகவல் படி, ஜோர்டானில் உள்ள இலங்கை தூதுவர் JADS பிரியங்கிகா விஜேகுணசேகர மற்றும் ஜோர்டானின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நாயகம் மஜேத் தாலிஜி அல் கதர்னே ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதன் மூலம் ஜோர்டானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை ஆழப்படுத்துவதுடன், மக்களிடையே அதிகளவான தொடர்புகளை ஏற்படுத்த முடியும் என செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இரு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மறுபரிசீலனை செய்வதற்கும், பொதுவான நலன்களின் பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் உதவும் என இலங்கைக்கான தூதுவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## வர்த்தகர் வாகனத்துடன் எரித்துப் படுகொலை

### திருகோணமலையில் சம்பவம்

திருகோணமலை, மொரவெள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப்பகுதியில் வர்த்தகர் ஒருவர் வாகனத்துடன் எரித்து கொலை செய்யப்பட்டுள்ளதாக மொரவெள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலஸ் தோட்டம் பகுதியைச் சேர்ந்த மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த 42 வயதுடைய ஆண் வர்த்தகரே இவ்வாறு எரித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த வர்த்தகர் பயணித்ததாக கூறப்படும் வாகனம் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 2.45 மணியளவில் வில்கம் விகாரைப்பகுதியைக் கடந்து பயணித்துள்ளமை அப்பகுதியில் உள்ள சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது.

இதனை தொடர்ந்து குறித்த வாகனம் மொராவெள பகுதிக்கு திரும்பாத நிலையில் பொலிஸார் காட்டுப்பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போதே பன்மதவாச்சி காட்டுப் பகுதியில், வர்த்தகர் பயணித்ததாகக் கூறப்படும் வாகனத்துடன் எரிக்கப்பட்ட நிலையில் சடலம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

கொலைக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(ம-7)

## சிலாபம் தெதுரு ஓயாவில் நீராடச் சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(சிலாபம்)

சிலாபம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெதுரு ஓயாவில் நீராடச் சென்றவர்களில் இருவர் நீரில் மூழ்கிய நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவர்கள் நேற்று முன்தினம் மாலை நீராடச் சென்றுள்ளனர். நீரில் மூழ்கிய ஒருவர் காப்பாற்றப்பட்டதாகவும், மற்றைய நபர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 20 வயதுடைய ஹட்டன் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் உயிரிழந்த இளைஞன் தனது மனைவி மற்றும் 3 பேருடன் தெதுரு ஓயாவில் நீராடச் சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மகாவலிகங்கைக்கு அருகில் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுப்பு

(கொழும்பு)

கட்டுகஸ்தோட்டை, மடவளை வீதியில், மகாவலி கங்கையின் நீராடும் பகுதிக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஹந்தகல, ஹலோய பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்நிலையில் அவரது சடலம் கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## சர்வதேச கிரிக்கெட் பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டம் இவ்வாரம் இலங்கையில்

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் வருடாந்த பொதுக் கூட்டம் இந்த ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ளது.

பொதுக் கூட்டம் ஜூலை 19 முதல் 22 வரை நடைபெற உள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் உள்ள 108 ஐசிசி உறுப்பு நாடுகளில் இருந்து 220க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த கிரிக்கெட் மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் - ஒரு பார்வை

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

19

ஜாத்தியா கட்சி 265 வேட்பாளர்களை நிறுத்தியது. எனினும் இவர்களில் 26 பேர் வேட்புமனுவை திரும்பப் பெற்றுக்கொண்டனர். பிரதான எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாத கட்சி இந்த தேர்தலை புறக்கணித்தது. தற்போதுள்ள அரசின் தலைமையில் தேர்தல் நியாயமாக நடக்காது என்பதால் தேர்தலை புறக்கணிப்பதாக அக்கட்சி அறிவித்திருந்தது.

ஜனவரி 4, 2024 அன்று தேர்தல் ஆணையம் வெளியிட்ட தரவுகளின் படி, பாராளுமன்றத் தேர்தலில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 119, 689,289 (கிட்டத்தட்ட 120 மில்லியன்) பேர். அவர்களில், பாதிப் பேர் (60,769,741) ஆண் வாக்காளர்கள், 58,918,699 பெண் வாக்காளர்கள் மற்றும் 849 திருநங்கை வாக்காளர்கள். தேர்தல் ஆணையத்தின்படி, 90 பெண்கள், 79 சிறுபான்மையினர் உட்பட 1,970 வேட பாளர்கள் களத்தில் இருந்தனர். இந்த தேர்தலில் 28 அரசியல் கட்சிகள் சார்பில் வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர். அதோடு, 747 சுயேட்சைகளும் போட்டியிட்டனர். மொத்த இறுதி வாக்குச் சாவடி மையங்கள் 42,148 மற்றும் இறுதி வாக்குச் சாவடிகள் 261,564.

தேர்தல் காலத்தில் வங்கதேசத்தில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்பட்டன. தலைநகர் டாக்காவில் பெனாபோல் எக்ஸ்பிரஸ் ரயிலுக்கு மர்ம நபர்கள் தீ வைத்ததில் பயணிகளில் 4 பேர் உயிரிழந்தனர். குறித்த தீவைப்புச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பிரதான எதிர்க்கட்சி அரசியல்வாதி உட்பட 06 கட்சி செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

தேர்தலை முன்னிட்டு சிறுபான்மையினர் குறிவைக்கப்படலாம் என்பதால், சிறுபான்மையினருக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்குமாறு இந்து மதம், புத்த மதம், கிறிஸ்தவ மதங்களின் ஐக்கிய கூட்டமைப்பு அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தன. ஆனால் அவ்வாறான சம்பவம் ஏதும் இடம்பெறவில்லை.

செய்தியாளர்களிடம் பேசிய வங்கதேச தலைமை தேர்தல் ஆணையர் காஜி ஹபிபுல் அவால், நம்பகத்தன்மை நிறைந்த தேர்தலில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். இந்த தேர்தல் தேசிய அளவில் மட்டுமல்லாது சர்வதேச அளவில் கண்காணிக்கப்படுகிறது. தேர்தல் காலை 8 மணிக்குத் தொடங்கி 4 மணி வரை நடைபெறும். 4 மணிக்கு வரிசையில் நிற்பவர்கள் வாக்களிக்கும் வரை தேர்தல் நடைபெறும். எனவே, அதிகபட்சம் மாலை 6 மணி வரை தேர்தல் நடைபெறலாம். வாக்குப்பதிவு நிறைவடைந்த உடன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தேர்தலில், ஜனாதிபதி முகமது சஹாபுதீனும் முதல் பெண்மணி ரெபேக்கா சுல்தானாவும் 3 ஜனவரி 2024 அன்று தபால் வாக்குகளைப் பயன்படுத்தி வாக்களித்தனர். வங்காளதேச தேர்தல் வரலாற்றில் தபால் வாக்குகளைப் பயன்படுத்திய முதல் நிகழ்வு இதுவாகும்.

வாக்களித்த பின் என்ன சொன்னார் பிரதமர் ஷேக் ஹசீனா?

பிரதமர் ஷேக் ஹசீனா இன்று காலை டாக்காவின் சிட்டி காலேஜ் சென்டருக்கு சென்று வாக்களித்தார். அவர் கோபால் கஞ்ச்-3 தொகுதியில் போட்டியிடுகிறார். அவருடன் அவரது மகள் சைமா வாஜேத் மற்றும் சகோதரி ஷேக் ரெஹானாவும் வாக்களிக்க வந்தனர். வாக்களித்த பின்னர், பிரதமர் ஷேக் ஹசீனா, வாக்காளர்கள் அனைவரும் வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்ற பிரதான எதிர்க்கட்சியான பிஎன்பி கட்சியின் வேண்டுகோளுக்கு பதிலளித்த ஷேக் ஹசீனா,"நான் யாருக்கு என்னை நிரூபிக்க வேண்டும்? பயங்கரவாத அமைப்புக்கா? அது தேவையில்லை. மக்களிடம் நிரூபிப்பேன். மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா இல்லையா என பாருங்கள்,"என்றார்.

"அவர்கள் (எதிர்க்கட்சிகள்) என்ன சொன்னாலும் எனக்கு கவலையில்லை. நாட்டில் ஜனநாயகம் நிலவுவதற்கு என்னால் இயன்றவரை முயற்சி செய்வேன். மக்கள் என்னுடன் இருக்கிறார்கள் என்பதை நான் எப்போதும் உறுதியாக அறிவேன். இன்ஷா அல்லாஹ் தேர்தலில் வெற்றி பெறுவோம். நாங்கள் வெற்றி பெறுவோம், அதில் எந்த சந்தேகமும் இல்லை.

"எங்கள் நாடு இறையாண்மை மற்றும் சுதந்திரமானது. எங்களிடம் அதிக மக்கள் தொகை உள்ளது. மக்களின் ஜனநாயக உரிமைகளை நாங்கள் நிறுவியுள்ளோம். இந்த நாட்டில் ஜனநாயகம் தொடர்வதை உறுதி செய்ய விரும்புகிறேன்" என்று அவர் கூறினார்.

இந்தியாவைப் பற்றி, ஷேக் ஹசீனா யுஜே செய்தி நிறுவனத்திடம் பேசுகையில், "உங்களை (இந்தியாவை) மனதார வரவேற்கிறோம். நாங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். இந்தியா எங்கள் நம்பகமான நண்பர். எங்கள் விடுதலைப் போரின்போது, அவர்கள் எங்களுக்கு ஆதரவளித்தனர்."

தனது சகோதரியை குறிப்பிட்டு பேசிய ஷேக் ஹசீனா, "1975 இற்குப் பிறகு, நாங்கள் எங்கள் முழு குடும்பத்தையும் இழந்து, நாங்கள் இருவர் மட்டுமே இருந்தோம், பின்னர் அவர் எங்களுக்கு இந்தியர்கள் தான் அடைக்கலம் கொடுத்தனர். எனவே, இந்திய மக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்," என்றார்.

**தேர்தல் முடிவு**

பங்களாதேஷில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய பொதுத்தேர்தலில் பிரதமர் ஷேக் ஹசீனா நான்காவது தடவையாக வெற்றி பெற்றுள்ளார். 300 பாராளுமன்ற தொகுதிகளுக்கான தேர்தலில் 223 ஆசனங்களை ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. முக்கிய எதிர்கட்சியான பங்களாதேஷ் தேசிய கட்சி தேர்தலை பகிஷ்கரித்தமை குறிப்பிடத்தக்கது. தேர்தல் ஒரு மோசடி ஏமாற்று நாடகம் என எதிர்க்கட்சி விமர்சித்துள்ளது.

40 வீதமான வாக்காளர்களே வாக்களித்தனர் என உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்ற போதிலும் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை இதனை விட குறைவு என கருத்துக்கள் வெளியாகியுள்ளன. 2018 பொதுத் தேர்தலில் 80 வீதமானவர்கள் வாக்களித்திருந்தனர்.

இந்நிலையில், பல தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், சுமார் 20 வாக்களிப்பு நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அமெரிக்கா தேர்தல் சுதந்திரமான மற்றும் நியாயமானதாக இல்லை என்று கூறியது. இங்கிலாந்தின் வெளியுறவு, மற்றும் காமன்வெல்த் மேம்பாட்டு அலுவலகம் தேர்தலை ஜனநாயகத்தின் முன்நிபந்தனைகள் இல்லாததாகக் கூறியது.

அமெரிக்கா, கனடா, ரஷ்யா, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் அரபு பாராளுமன்றம் ஆகியவற்றிலிருந்து அழைக்கப்பட்ட வெளிநாட்டு பார்வையாளர்கள், பங்களாதேஷில் பொதுத் தேர்தல்கள் நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடந்ததாகக் கூறினர்.

ஜனவரி 8 ஆம் திகதி, வங்கதேசத்துக்கான சீனத் தூதர் யாவ் வென், புதிதாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஷேக் ஹசீனாவின் இல்லத்திற்குச் சென்று தேர்தலில் வெற்றி பெற்றதற்காக அவரை வாழ்த்திய முதல் வெளி நாட்டுப் பிரமுகர்களில் ஒருவர். பங்களாதேஷின் இறையாண்மையைப் பாதுகாப்பதிலும், வெளிநாட்டின் தலையீட்டை எதிர்ப்பதிலும் சீனா ஆதரவளிக்கும் என்று அவர் கூறியதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வங்காளதேசத்திற்கான முன்னாள் தூதுவர் மசாடோ வதனாபே தலைமையிலான ஜப்பானின் தேர்தல் பார்வையாளர் பணி, சில முறைகேடுகளைப் புகாரளித்திருந்தது. தேர்தலுக்கு முந்தைய காலத்தில் வன்முறை சம்பவங்கள் நடந்தாலும், ஜனநாயக நாடாக பங்களாதேஷின் முன்னேற்றத்திற்கான நம்பிக்கையை ஜப்பான் வெளிப்படுத்துகிறது என்று ஜப்பான் தெரிவித்தது. மேலும் நாட்டின் வளர்ச்சியை ஆதரிப்பதற்கும், இருதரப்பு உறவுகளை மூலோபாய பங்காளியாக வலுப்படுத்துவதற்கும் அதன் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, பிரதமர் ஷேக் ஹசீனாவை சந்தித்து, பாராளுமன்ற தேர்தலில் தொடர்ந்து நான்காவது முறையாக வெற்றி பெற்றதற்கு வாழ்த்துத் தெரிவித்தார். தேர்தலை வெற்றிகரமாக நடத்தியதற்காக வங்கதேச மக்களுக்கும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார். பங்களாதேசுடனான தங்கள் நீடித்த மற்றும் மக்களை மையமாகக் கொண்ட கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளதாக கூறியிருந்தார்.

12 ஆவது பாராளுமன்ற தேர்தலில் அவாமி லீக் வெற்றி பெற்ற ஷேக் ஹசீனாவுக்கு ரஷ்யா வாழ்த்து தெரிவித்துள்ளது. வங்கதேசத்துக்கான ரஷ்ய தூதர் அலெக்சாண்டர் மாண்டிட்ஸ்கியை, அவாமி லீக் தலைவரான ஷேக் ஹசீனா, கணபாபனில் வரவேற்றார். ரஷ்யாவுக்கும் வங்காளதேசத்துக்கும் இடையே மேலும் ஒத்துழைப்புக்கான நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார், மேலும் இருதரப்பு கூட்டுறவின் நம்பிக்கைக்குரிய பகுதிகளை கோடிட்டுக் காட்டினார்.

கனடா, ஜனவரி 9, 2024 அன்று ஒரு அறிக்கையில், ஜனவரி 7 பாராளுமன்றத் தேர்தலின் போது மிரட்டல் மற்றும் வன்முறைச் செயல்களைக் கண்டித்து, வங்காளதேச குடிமக்களின் ஜனநாயக அபிலாஷைகளைப் பாராட்டியது. ஜனநாயகக் கோட்பாடுகளுக்குப் புறம்பாக தேர்தல் செயற்பாட்டில் உள்ள ஏமாற்றத்தை வெளிப்படுத்தியது.

மனித உரிமைகளுக்கான ஐநா உயர் ஆணையர் வோல்கர் டர்க், பங்களாதேஷின் சமீபத்திய தேர்தல்கள் குறித்து கவலை தெரிவித்தார், எதிர்க்கட்சி வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் அடக்குமுறையை மேற்கோள் காட்டி. பிரதம மந்திரி ஷேக் ஹசீனா தலைமையிலான புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை, மனித உரிமைகள் கவலைகளை நிவர்த்தி செய்யவும் மற்றும் உள்ளடக்கிய ஜனநாயகத்தின் அடித்தளத்தை மேம்படுத்தவும் டர்க் வலியுறுத்தினார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரி...

குறித்த சடலம் யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இது தொடர்பில் பூநகரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## கருவள சிகிச்சை...

கிழக்கு மாகாணங்களில் யாழ் போதனா வைத்தியசாலையிலேயே முதன்முதலாகப் பாவனைக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த இயந்திரமானது சாதாரண ஸ்கான் வசதிகள், கருவள சிகிச்சைக்கான ஸ்கான் வசதிகள், கர்ப்பவதிகளுக்கான சாதாரண ஸ்கான் வசதிகள் குறிப்பாக அசாதாரண குறைபாடுடைய சிசுக்களை ஆரம்ப கர்ப்ப காலத்திலேயே கண்டறிவதற்கான அதிநவீன தொழிநுட்ப வசதிகளையும் கொண்டுள்ளது.

மருத்துவ மாணவர்களுக்கும் பெண்ணோயியல் மற்றும் மகப்பேற்று சிகிச்சைத்துறையில் மேற்படிப்பை மேற்கொள்ளும் வைத்தியர்களுக்கும் தமது கல்விசார் நடவடிக்கைகளை மேம்படுத்திக்கொள்வதற்கும், மருத்துவ ஆராய்ச்சிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்கும் இவ்வுபகரணம் உதவியாக இருக்கும். (ம-7)

## மின்சாரக்...

கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பியிருந்தது.

இதற்கமைய, 0 முதல் 30 வரையான மின் அலகு ஒன்றின் கட்டணம் 2 ரூபாயினாலும், 30 முதல் 60 வரையான அலகு ஒன்றின் கட்டணம் 11 ரூபாயினாலும் குறைக்கப்பட்டுள்ளது.

60 முதல் 90 வரையான அலகு ஒன்றின் கட்டணம் 12 ரூபாயினாலும், 90 முதல் 120 வரையிலான அலகு ஒன்றின் கட்டணம் 20 ரூபாயினாலும் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, வீட்டுப் பாவனை மின் கட்டணம் 27 சதவீதத்தினாலும் மத ஸ்தலங்களுக்கான மின் கட்டணம் 30 சதவீதத்தினாலும் விருந்தகங்கள் மற்றும் கைத்தொழிற்துறைக்கான கட்டணம் 25 சதவீதத்தினாலும் குறைவடைகின்றது. (ம-7)

## நிறைவுக்கு...

சன்னம், திறப்புக் கோர்வை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இரண்டு கட்டங்களிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட 40 மனித எச்சங்களுக்கு மேலதிகமாக மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின்போது நேற்றுடன் 52 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ உள்ளிட்ட குழுவினர், முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார், சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன், கிராம சேவையாளர் உள்ளிட்ட தரப்பினரின் பங்குபற்றுதல்களுடன் பத்தாம் நாள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றிருந்தன.

இது தொடர்பாக விஷேட சட்ட வைத்திய நிபுணர் கனகசபாபதி வாசுதேவ கருத்து தெரிவிக்கையில்,

இன்றையதினம் (நேற்று) மூன்றாம் கட்டமாக தொடர்ந்த கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வானது பத்தாவது நாளாக நடைபெற்றது.

நேற்று அநேகமாக மனிதப் புதைகுழியில் கிடந்த எலும்புத்தொகுதிகள் முழுக்க மீட்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக இதுவரை 52 மனித எலும்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் நேற்று துப்பாக்கிச் சன்னம், திறப்புக்கோர்வை என்பன மேலதிக சான்றாதாரப் பொருட்களாக பெறப்பட்டுள்ளன.

அடுத்துவரும் நாட்களில் இப்புதைகுழி தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் தொடரும் என்றார். (ம-7,299)

## பல்கலைக்கழக...

அந்த வகையில் 75 நாள் தொடர் வேலைநிறுத்தத்தை நேற்று முதல் முடிவுக்கு கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டது. (ம-7)

## வைத்தியர்...

டது.

வைத்தியசாலை அத்தியட்சகர் அலுவலகத்தில்

யட்சகர் என இராமநாதன் அர்ச்சுனாவும் கோபால மூர்த்தி ரஜீவும் நீண்ட விவாதத்தில் ஈடுபட்ட நிலையில் பொலிஸார் தலையிட்டு சுமூகமான நிலையை ஏற்படுத்த முயன்றனர்.

இதனையடுத்து சில மணி நேரங்கள் வைத்தியசாலை அலுவலக அறையில் சில கடமைகளில் ஈடுபட்டுவிட்டு இராமநாதன் அர்ச்சுனா வெளியேறிச் சென்றார்.

இதேவேளை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் ரஜீவ் தொடர்ந்தும் கடமையில் உள்ளார்.

தனக்கு உத்தியோகபூர்வமாக மத்திய சுகாதார அமைச்சில் இருந்து என்னை நீக்குவதற்கான கடிதம் வராத நிலையில் நானே சாவகச்சேரி வைத்தியசாலைப் பதில் அத்தியட்சகர் என தெரிவித்த இராமநாதன் அர்ச்சுனா, எனது விடுமுறை நேற்று (நேற்று முன்தினம்) நிறைவடைந்த நிலையில் இன்று (நேற்று) மீண்டும் கடமைக்கு வந்துள்ளேன் எனத் தெரிவித்தார்.

இன்று சுகாதார அமைச்சர் உள்ளிட்ட உயர் மட்டக்குழு யாழ்ப்பாணத்துக்கு வரும்போது இது தொடர்பில் முடிவு எட்டப்படும் எனவும் இராமநாதன் அர்ச்சுனா நம்பிக்கை வெளியிட்டார்.

வெளியேறிச் சென்ற வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவை குழுமிய பொது மக்கள் அவரை தோளில் தாங்கிச் சென்றனர்.

இதேவேளை சாவகச்சேரி வைத்தியசாலைப் பகுதியில் காலை முதல் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு காணப்பட்டதுடன் வைத்தியசாலை செயற்பாடுகள் சுமுகமாக நடைபெற்றது. (ம-7,30,33)

## கனடா...

காரிகள் கைது செய்துள்ளனர்.

பொரளை பிரதேசத்தில் இயங்கும் நிறுவனமொன்று கனடாவில் நிதித்துறையில் தொழில் வழங்குவதாகக் கூறி 10 இலட்சம் ரூபாயைப்பெற்றுக் கொண்ட போதிலும் வாக்குறுதியளித்தபடி வேலை வழங்கவில்லை என நபர் ஒருவர் பணியகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து, சம்பந்தப்பட்ட இடத்தில் விசாரணை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இதன்போது, குறித்த நிறுவனம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி நடத்தப்பட்ட சட்டவிரோத வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் எனத் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, குறித்த நிறுவன உரிமையாளர் உட்பட மேலும் ஒருவரை புலனாய்வு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது, 10 இலட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2024.07.15
சீட்டிழுப்பு இலக்கம் 5535
M 0 7 7 7 9 2
அத சம்பத M 7 7 9 2
சீட்டிழுப்பு இலக்கம் 110
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.07.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1565
K 20 22 24 48 K
12258

மெகா பவர்
திகதி 15/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1883
U 09 02 31 70 73
46189

லக்கி 7 VIP
திகதி 2024.07.15
சீட்டிழுப்பு இலக்கம் 361
M 5 2 9 8 3 2 M

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3777
சீட்டிழுப்பு திகதி 15.07.2024
E 17 30 40 44
E
79584

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.15
சீட்டிழுப்பு இலக்கம் 0844
மேஷம் 21 24 54 56 மேஷம்
28316 27

உத்தியோகபூர்வ முடிவுகள்
15.07.2024 வெற்றி வாரம் 243 வர்ணம் ஊதா
ஆங்கில எழுத்து E மற்றும் வெற்றி இலக்கம் 5 7 4 7 5 5
29295
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,665,624.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2509 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 15.07.2024 தினம் திங்கள்
43 53 54 64 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 98,975,442.40

சனிதா
திகதி 2024.07.15 வெற்றி வாரம் 4670
02 07 40 60 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,243,394.00
96784

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4221 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.15 தினம் திங்கட்கிழமை
05 16 36 56 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,246,915.60
468229

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 33 25 43 65 74
சுப்பர் இலக்கம்
1685 பச்சை 15.07.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 533,312,873.00

ஜயோதா Jayoda
திகதி 2024.07.15 வெற்றி வாரம் 2042 வர்ணம் செம்மஞ்சள்
17 50 64 65 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,365,886.80

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2335
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,759,979.20
20 51 57 69 B
503149

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு

ஆடைகளின் சாம்ராஜ்யம்

# இந்தியன் செலக்‌ஷனின்

ஆடி மாத ஆடைத் தள்ளுபடி



- திருமணப் பட்டுச்சாறிகள்
- கொட்டன் சாறிகள் சல்வார்கள்
- சல்வார் துணிகள்
- புத்தம் புது டொப் வகைகள்
- மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான
- ஆடைத் தெரிவுகள்...

இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்

காலம் : 12.07.2024 - 06.08.2024 வரை

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

(164)


# பரந்தன் இரசாயன தொழிற்சாலைக்கு இராஜாங்க அமைச்சர் திலும் விஜயம்



வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கவுள்ள நான்கு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராயும் நோக்கில் முதலீட்டு மேம்பாடு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அவர்கள் வடக்கிற்கான விஜயமொன்றை நேற்றைய தினம் மேற்கொண்டிருந்தார்.

இதன் ஓர் அங்கமாக கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் இரசாயன தொழிற்சாலைக்கு முதலீட்டு மேம்பாடு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அவர்கள் நேற்று மாலை 3.00 மணியளவில் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன் போது நாட்டில் நிலவிய கடந்தகால அசாதாரண நிலையினால் அழிவடைந்து, நீண்ட காலமாக புனர்நிர்மாணப் பணிகள் எதுவும் செய்யப்படாத நிலையிலுள்ள பரந்தன் இரசாயன தொழிற்சாலை மற்றும் தொழிற்சாலைக்கு சொந்தமான வயல் நிலங்களை முதலீட்டு மேம்பாடு இராஜாங்க அமைச்சர் பார்வையிட்டார்.

230 ஏக்கர் நிலப் பரப்பில் அமையப்பெற்ற குறித்த தொழிற்சாலையினை விசேட முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் உருவாக்கும் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யும் நோக்கில் குறித்த விஜயம் அமைந்திருந்தது.

இக்களவிஜயத்தில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், அமைச்சின் அதிகாரிகள், கண்டாவளை பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன், கிராம சேவகர், கண்டாவளை பிரதேச செயலக காணி பிரிவு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும்கலந்து கொண்டனர். (ம-7)


## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 17 37 684

(157)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0803)

076 825 7716 (ஆகாஸ்)


# மரண அறிவித்தல்



| உருவாய் | அருவாய் |
|---|---|
| 1947 - 04 - 02 | 2024 - 07 - 13 |

## திருமதி இராஜேஸ்வரி செல்வரட்ணம்

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி செல்வரட்ணம் அவர்கள் கடந்த சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நரசிங்கம் - இராசம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கோப்பாய் தெற்கு கும்பப்பிள்ளையைச் சேர்ந்த செல்லையா - வள்ளியம்மை தம்பதியினரின் பாசமிகு மருமகளும் செல்வமுரளி, ரஜனி (கலாசார உத்தியோகத்தர் - பிரதேச செயலகம்-சண்டிலிப்பாய்), செல்வமோகன் (பொறியியலாளர் அமெரிக்கா), செல்வஜிந்தன் (அலுவலகப் பொறுப்பாளர், போதனாசிரியர் - தொழிற்பயிற்சி அதிகார சபை,சம்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நளாயினி, மேஜர்.நா.நரேந்திரா (அலுவலகப் பொறுப்பாளர்- தேசிய இளைஞர் படையணி-முல்லைத்தீவு, ஆசிரியர் - யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி), டனிஷா, ஷஜீவினி ஆகியோரின் மாமியாரும் செந்துஜி, பிரவீனா, பிருந்தாபன், பிரதீபன், பிரசாந்தினி, பிரசாந்தன், செந்துஜன், செந்தீபன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 16.07.2024 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"இராஜேஸ் பவனம்"
பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம். (1481)

தகவல் :
குடும்பத்தினர்
076 466 9188


## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு கொத்து றொட்டி போடுதல், பிறைட்றைஸ் தயாரித்தல், றொட்டி வேலை செய்தல், உணவு பரிமாறுபவர்கள் போன்ற வேலைகளில் மிகவும் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.

தொடர்புகளுக்கு :

077 649 1027

(C-0804)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு
(C-0802)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-0802)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## வீடு/ அறை வாடகைக்கு தேவை

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் சிறிய வீடு/ அறை குறுகிய காலத்திற்கு வாடகைக்கு தேவை.

077 103 8148

(1484)

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர்
யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு
சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய்
நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241
(C-0802)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org